# தினபூமி

thinaboomi.com

பூமி: 30 சுற்று: 234 ஆடி 15

Regd. No.CBE/090/2011-2013

கோவை, வியாழன், ஜூலை 31, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




## இந்தியா மீது 25 சதவீதம் வரை வரி விதிப்பு; ட்ரம்ப் எச்சரிக்கை: நாளை முதல் அமலுக்கு வருகிறது

....2-ம் பக்கம்

## நீதிபதி யஷ்வந்த் வர்மா பதவி விவகாரம்: பாராளுமன்றம் முடிவு செய்யும்: சுப்ரீம் கோர்ட்

...3-ம் பக்கம்

## இங்கி.க்கு எதிரான கடைசி டெஸ்ட்: இந்திய அணியில் பும்ராவுக்கு பதில் ஆகாஷ் தீப் இணைந்தார்

...6-ம் பக்கம்





● சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்நாட்டின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டினையொட்டி அமைக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட தமிழ்நாட்டை சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற ஆழ்நிலை கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை பார்வையிட்டு ஆராய்ச்சியாளர்களுடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மாநில திட்டக்குழுவின் செயல் துணைத்தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் உள்ளனர்.

### 10 நாட்களுக்கு பிறகு வழக்கமான பணிகளை மேற்கொள்ள

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச்செயலகம் வருகை

## பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைக்கிறார்

சென்னை, ஜூலை 31-

**முதலவர் மு.க.ஸ்டாலின் இன்று காலை தலைமைச் செயலகம் வருகிறார். பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கிறார். கடந்த ஞாயிற்றுக்கிழமை மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீடு திரும்பிய நிலையில் 10 நாட்களுக்கு பிறகு வழக்கமான பணிகளை மேற்கொள்ள இருக்கிறார்.**



**உடல்நலக் குறைவு...**

முதலவர் மு.க.ஸ்டாலின் உடல்நலக் குறைவு காரணமாக கடந்த 21-ம் தேதி அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். லேசான தலைசுற்றல் ஏற்பட்ட காரணத்தால் அவருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆஞ்சியோ பரிசோதனையும் செய்யப்பட்டது.

**கட்சி பணிகளை...**

முதலவர் மு.க.ஸ்டாலின் ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருந்த போது அங்கிருந்தபடியே அரசு பணிகளை கவனித்தார். 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களுக்கு வந்திருந்த பொதுமக்களை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு பேசினார்.

மாவட்ட கலெக்டர்களிடமும் கேட்டறிந்தார். அரசுப் பணிகளை மேற்கொண்ட அவர் கட்சி பணிகளையும் கவனித்தார். தி.மு.க. மண்டல பொறுப்பாளர்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்து ஆலோசனை மேற்கொண்டார்.

**காணொலி மூலம்...**

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீடு திரும்பிய முதலவர் மு.க.ஸ்டாலின் 3 நாட்களாக வெளியில் எங்கும் நிகழ்ச்சிகளுக்கு செல்லவில்லை.

இந்த நிலையில் முதலவர் மு.க.ஸ்டாலின் இன்று காலை தலைமைச் செயலகம் வருகிறார். முடிவுற்ற பல்வேறு திட்டப்பணிகளை காணொலியில் திறந்து வைக்கிறார். கடந்த 10 நாட்களுக்கு பின்பு அவர் தலைமைச் செயலகம் வந்து வழக்கமான பணிகளை மேற்கொள்ள இருக்கிறார்.

# தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலம்

## துணை முதல்வர் உதயநிதி பெருமிதம்

சென்னை, ஜூலை 31-

**தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் அதிகளவில் தொழில் முதலீடுகள் குவிந்து வருகிறது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழ்நாட்டின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாடு நடைபெற்றது. இதையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற கண்டு பிடிப்புகள் அடங்கிய அரங்குகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு, ஆராய்ச்சியாளர்களுடன் கலந்து ரையாடினார்.

நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:-

தகவல் தொழில்நுட்ப துறை சார்பில் தமிழ்நாட்டில் முதன்முறையாக அறிவுசார் சொத்துரிமை மாநாடு நடைபெறுகிறது.

திராவிட மாடல் அரசு புதிய தொழில் நுட்பங்களை எப்போதும் வரவேற்கிறது. திராவிட மாடல் ஆட்சியில் தகவல் தொழில்நுட்பத் துறை சிறந்து விளங்குகிறது.

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் அதிகளவில் தொழில் முதலீடுகள் குவிந்து வருகிறது.

கலைஞர் ஆட்சியில் தான் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் உருவாக்கப்பட்டன. இன்று அது வளர்ச்சி அடைந்துள்ளது.

மென்பொருள் ஏற்றுமதியில் இந்திய அளவில் 3-வது மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. 'நான் முதல்வன்' திட்டம் மூலம் தமிழக மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் சாதித்து வருகின்றனர். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாநிலத் திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னித், ஐடி என்டி மையத்தின் தலைமைச் செயல் அலுவலர் வனிதா வேணுகோபால், தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (ஓய்வு) கமாண்டர் அமித்ரஸ்தோகி, ஜெட் வெர்க்கின் எலக்ட்ரானிக்ஸ் தலைவர் ஜோஷ் போல்கர், மற்றும் ஆராய்ச்சியாளர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# பிரதமர் மோடி தமிழகம் வருகிறார்

## சிதம்பரம், தி.மலையில் சுற்றுப்பயணம்

புதுடெல்லி, ஜூலை 31-

**ஒருமாத இடைவெளியில் 2-வது முறையாக வருகிற ஆகஸ்டு 26-ந் தேதி பிரதமர் மோடி மீண்டும் தமிழகம் வருகிறார். சிதம்பரம், தி.மலையில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள அவர் திட்டமிட்டுள்ளார்.**

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. இதனையடுத்து, தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., நாம் தமிழர் மற்றும் த.வெ.க. உள்ளிட்ட கட்சிகள் அதற்கான அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், பிரதமர் மோடி தமிழகத்தில் 2 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதற்காக கடந்த சனிக்கிழமை மாலத்தீவில் இருந்து தனி விமானம் மூலம் இரவு 7.50 மணிக்கு தூத்துக்குடிக்கு சென்றார். விமான நிலையத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதன்பின்னர், இரவு 8 மணியளவில் நடந்த விழாவில், ரூ.452 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

பின்னர் விமான நிலைய வளாகத்தில் நடைபெறும் விழாவில் கலந்து கொண்டு, ரெயில்வே துறையில் நிறைவேற்றப்பட்ட ரூ.1,030 கோடி மதிப்பிலான பணிகள், நெடுஞ்சாலைத்துறையால் முடிக்கப்பட்டுள்ள ரூ.2 ஆயிரத்து 571 கோடி மதிப்பிலான பணிகள், ரூ.548 கோடி மதிப்பீட்டில் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 3 மற்றும் 4-வது பிரிவில் மின்சாரத்தை வெளியேற்றுவதற்காக உள்ள மின் பரிமாற்ற அமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் என ரூ.4 ஆயிரத்து 800 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்த விழாவில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி மற்றும் மத்திய மந்திரிகள், மாநில அமைச்சர்கள் என பலர் கலந்து கொண்டனர். விழா முடிந்த பிறகு தனிவிமானம் மூலம் பிரதமர் மோடி திருச்சி சென்றார். அடுத்த நாள், அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் நடைபெற்ற ஆடி திருவாதிரை விழாவில் பங்கேற்றார்.

ரூ.1,000 மதிப்பிலான, பேரரசர் ராஜேந்திர சோழன் நினைவு நாணயம் ஒன்றையும் பிரதமர் மோடி வெளியிட்டார். இதன்பின்பு, திருச்சிக்கு ஹெலிகாப்டரில் சென்ற அவர், அதன்பின்னர் டெல்லிக்கு புறப்பட்டு சென்றார்.


இந்நிலையில், பிரதமர் மோடி மீண்டும் தமிழகத்திற்கு வருகை தருகிறார். வருகிற ஆகஸ்டு 26-ந்தேதி தமிழகம் வருகை தரும் பிரதமர் மோடி, சிதம்பரம் மற்றும் திருவண்ணாமலை பகுதிகளுக்கு செல்கிறார் என தகவல் தெரிவிக்கின்றது. ஆன்மீக தலங்களில் முக்கியத்துவம் பெற்ற இந்த பகுதிகளில் உள்ள கோவில்களில் சாமி தரிசனம் செய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நடராஜர் கோவிலில் இருந்து மனதின் குரல் நிகழ்ச்சி மூலம் நேரலையில் நாட்டு மக்களுக்கு உரையாற்ற உள்ளார். ஒரு மாத இடைவெளியில் 2வது முறையாக தமிழ்நாடு வருகிறார் பிரதமர் மோடி.

### 'நிசார்' செயற்கைக்கோளுடன்

# ஜி.எஸ்.எல்.வி. எப்-16 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது

சென்னை, ஜூலை 31-

**பூமியின் மேற்பரப்பை கண்காணிக்கும் இஸ்ரோ-நாசா கூட்டு தயாரிப்பான 'நிசார்' செயற்கைக்கோளுடன் ஜி.எஸ்.எல்.வி. எப்-16 ராக்கெட் நேற்று (புதன்கிழமை) மாலை வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. மேலும் செயற்கைக்கோள் புவியில் இருந்து 743 கி.மீ. தொலைவில் சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.**



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மற்றும் அமெரிக்காவின் நாசாவின் முதல் கூட்டு செயற்கைக்கோளான நாசா - இஸ்ரோ செயற்கை துளை ரேடார் (நிசார்), இஸ்ரோவின் ஜி.எஸ்.எல்.வி. எப்-16 ராக்கெட் மூலம் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து நேற்று மாலை 5.40 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

இதற்கான இறுதிக்கட்டப்பணியான 27½ மணி நேர 'கவுண்ட்டவுன்' நேற்று முன்தினம் பகல் 2.10 மணிக்கு தொடங்கியது. தொடர்ந்து ராக்கெட்டுக்கு எரிபொருள் நிரப்பும் பணி உள்ளிட்ட அனைத்து பணிகளும் நிறைவடைந்தன. 'நிசார்' செயற்கைக்கோள் 2 ஆயிரத்து 392 கிலோ எடையை கொண்ட, ஒரு தனித்துவமான பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளாகும். நாசாவின் 'எல்-பாண்ட்' மற்றும் இஸ்ரோவின் 'எஸ்-பாண்ட்' என்ற இரட்டை அதிர்வெண் செயற்கை துளை ரேடார் வகையை சேர்ந்தவையாகும். இந்த செயற்கைக்கோள் வானிலை, பகல் மற்றும் இரவு தரவுகளையும் வழங்குவதுடன் பரந்த அளவிலான பயன்பாடுகளை செயல்படுத்தும்.

'நிசார்' பூமியின் மேற்பரப்பில் ஏற்படும் சிறிய மாற்றங்களைக் கூட கண்டறிய முடியும். அதாவது பனிப்படல இயக்கம் மற்றும் தாவர இயக்கவியல். கடல் பனி வகைப்பாடு, கப்பல் கண்டறிதல், கரையோர கண்காணிப்பு, புயல் தன்மை, மண்ணின் ஈரப்பதத்தில் ஏற்படும் மாற்றங்கள், மேற்பரப்பு நீர் வளங்களை வரைபடம் செய்யும் திறன் கொண்டதாகும். இஸ்ரோ மற்றும் நாசா விஞ்ஞானிகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இந்த செயற்கைக்கோள் புவியில் இருந்து 743 கி.மீ. தொலைவில் சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

### கம்சட்கா தீபகற்பத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்:

# ரஷ்யா, ஜப்பான், அமெரிக்கா, சீனாவுக்கு சுனாமி எச்சரிக்கை

## மக்கள் அவசர அவசரமாக வெளியேற்றம்

டோக்கியோ, ஜூலை 31-

**ரஷ்யாவின் தூரக்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள கம்சட்கா தீபகற்பத்தில் 8.7 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனை அடுத்து ரஷ்யா, சீனா, ஜப்பான், அமெரிக்கா நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து மக்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.**

ரஷ்யாவின் தூரக்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள கம்சட்கா தீபகற்பத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 8.7 ஆக பதிவாகி உள்ளது. ரஷ்யாவில் 70 ஆண்டுகளில் இல்லாத வகையில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், ரஷ்யா, ஜப்பான், சீனா, அமெரிக்கா, பெரு, ஈக்வடார் நாடுகளுக்கும் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வடக்கு கலிபோர்னியாவில் உள்ள கிரசென்ட் சிட்டி, யுரேகா பகுதிகளுக்கும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

### இந்தியர்களுக்கு அறிவுறுத்தல்

**சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து உடனடியாக வெளியேற இந்தியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க அவசரநிலை மேலாண்மை மையத்தின் எச்சரிக்கைகளை இந்தியர்கள் பின்பற்ற வேண்டும்.சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும். சான் பிரான்சிஸ்கோ துணை தூதரகத்தின் +1-415-483-6629 என்ற உதவி எண்ணை இந்தியர்கள் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்தநிலையில், சுனாமி எச்சரிக்கையை அடுத்து ஜப்பான் பசிபிக் கடற்கரையோரம் உள்ள நகரங்களில் 9 லட்சம் பேர் உடனடியாக வெளியேற்றப் பட்ட னர்.ஹோக்கைடோ முதல் ஒகினாவா வரையிலான பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சுனாமி அச்சுறுத்தலால் ஜப்பானின் வடகிழக்கில் உள்ள விமான நிலையம் மூடப்பட்டது.

ரஷ்யாவின் செவெரோ-குரில்ஸ்க் மற்றும் வடக்கு ஜப்பானின் கரைகளை சுனாமி அலை தாக்கியது. அப்பகுதியில் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அதிகாரிகள் விரைவாக செயல்பட்டு வருகின்றனர். அதிகாரிகள் குடியிருப்பாளர்கள் விழிப்புடன் இருக்கவும், அனைத்து அவசர வழிமுறைகளையும் பின்பற்றவும் வலியுறுத்தினர்.


வடமேற்கு ஹவாய் தீவுகள் மற்றும் ரஷ்யாவின் கடற்கரையோரப் பகுதிகள் சீற்றத்துடன் காணப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்து இது வரை எந்த தகவலும் வெளியாகவில்லை. பசிபிக் கடலில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அமெரிக்காவின் ஹவாய் கடற்கரைக்கு சுனாமி அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. கரையோர பகுதியில் இருந்து கார்களில் சாரை சாரையாக மக்கள் வெளியேறுவதால் கடும் நெரிசல் ஏற்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| ↑ 143.91 | ↑ 33.95 |
| பாயிண்ட் 81,481.86 | பாயிண்ட் 24,855.05 |



**தங்கம்**
1 சவரன் ₹73,680
1 கிராம் ₹9,210



**வெள்ளி**
1 கிலோ ₹127,000
1 கிராம் ₹127.00

**டாலர்** ₹87.65

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

### சுனாமி எச்சரிக்கை எதிரொலி: ஜப்பானில்
# 9 லட்சம் பேர் வெளியேற்றம்



**டோக்கியோ, ஜூலை 31-**

ரஷ்யாவைத் தாக்கிய சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஜப்பானில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனால், சுனாமி பாதிக்கும் என கணிக்கப்படும் பகுதிகளில் இருந்து 9 லட்சம் பேரை வெளியேற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ரஷ்யாவின் கம்சாட்கா தீபகற்ப பகுதிக்கு அருகில் புதன்கிழமை காலை 8.25 மணிக்கு பூமிக்கு அடியில் 20 கிலோ மீட்டர் ஆழத்தில் ரிக்டர் அளவுகோலில் 8.7 ஆகப் பதிவான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் ரஷ்யா மட்டுமின்றி, ஜப்பான், ஹவாய், அலாஸ்கா ஆகிய பகுதிகளுக்கும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் கடலோர பகுதிகளில் 3 அடி உயரத்திற்கு கடலலைகள் எழும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதையடுத்து ஜப்பானின் பசிபிக் கடற்கரையில் 1 மீட்டர் வரை சுனாமி ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜப்பானின் வடக்கு திசையில் உள்ள தீவான ஹொக்கைடோவின் தெற்கு கரையில் அமைந்துள்ள டோகாச்சியில் 40 செண்டிமீட்டர் (சுமார் 1.3 அடி) அளவுக்கு அலைகள் மேலெழும்பியதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சுனாமி எச்சரிக்கைக்கு தொடர்ந்து ஜப்பானின் பசிபிக் கடற்கரையில் உள்ள ஹொக்கைடோ முதல் ஒகினாவா வரை 133 நகராட்சிகளில் உள்ள 9 லட்சத்துக்கும் அதிகமானோரை வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இஷினோமாகியில் 50 செண்டிமீட்டர் (1.6 அடி) அளவுக்கு அலைகள் மேலெழும்பியதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவு

**மேட்டூர், ஜூலை 31-**

காவிரியின் நீர் பிடிப்புப் பகுதிகளில் மழை தணிந்ததை அடுத்து புதன்கிழமை மேட்டூர் அணைக்கு நீர் வரத்து குறையத் தொடங்கியது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர் பிடிப்புப் பகுதிகளிலும், கேரளம் மாநிலம் வயநாட்டிலும் கனமழை பெய்த காரணத்தால் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்தது. அணைகளின் பாதுகாப்பு கருதி உபரிநீர் காவிரியில் திறந்துவிடப்பட்டது. இதனால் காவிரியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கடந்த 25-ம் தேதி முதல் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியது. கடந்த 25-ம் தேதி மேட்டூர் அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 25,400 கனஅடியாக அதிகரித்து பின்னர் படிப்படியாக அதிகரித்தது. திங்கள்கிழமை நீர் வரத்து வினாடிக்கு 1,10,500 கனஅடியாக அதிகரித்தது.

இந்நிலையில், தற்போது காவிரியின் நீர் பிடிப்புப் பகுதிகளில் மழை தணிந்ததால் கர்நாடக அணைகளிலிருந்து காவிரியில் திறக்கப்பட்டு வந்த உபரிநீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த இரண்டு நாள்களாக வினாடிக்கு 1,10,500 கனஅடியாக நீடித்த மேட்டூர் அணையின் நீர் வரத்து புதன்கிழமை காலை 70,400 கனஅடியாக குறைந்தது.

அணைக்கு நீர் வரத்து குறைந்ததால் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவும் வினாடிக்கு 70,400 கனஅடியாக குறைக்கப்பட்டது. நீர் மின் நிலையங்கள் வழியாக வினாடிக்கு 18,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. உபரி நீர் போக்கி வழியாக திறக்கப்பட்டு வந்த நீரின் அளவு வினாடிக்கு 92,000 கனஅடியிலிருந்து வினாடிக்கு 52,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. அணையின் நீர் மட்டம் 120 அடியாகவும், நீர் இருப்பு 93.47 டிஎம்சியாகவும் உள்ளது.

# அஜித்குமார் குடும்பத்திற்கு அ.தி.மு.க. சார்பில் ரூ.5 லட்சம் நிதி வழங்கப்படும்
### சிவகங்கையில் எடப்பாடி பழனிசாமி பேட்டி



**சிவகங்கை, ஜூலை 31-**

அஜித்குமார் குடும்பத்திற்கு அ.தி.மு.க. சார்பில் ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்று தெரிவித்துள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும் அஜித்குமார் சகோதரர் விரும்பிய இடத்தில் அரசு வேலை வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் தேர்தல் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி திருப்புவனத்தில் போலீஸ் காவலில் கொல்லப்பட்ட அஜித்குமார் புகைப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். மடப்புரத்தில் அஜித்குமார் தாயாருக்கும், சகோதரர் நவீன்குமாருக்கும் ஆறுதல் தெரிவித்தார். அதனை தொடர்ந்து அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

அஜித்குமார் மரணத்துக்கு நீதி கேட்டு குடும்பத்தார், அ.தி.மு.க.வினர் போராட்டம் நடத்தினர். மறைந்த அஜித்குமாருக்கு நீதி கேட்டு அ.தி.மு.க. சார்பில் போராட்டம் நடந்தது. அ.தி.மு.க. போராட்டத்தால் வேறு வழியின்றி சி.பி.ஐ. விசாரிக்க வேண்டுமென அரசு அறிவித்துள்ளது. தமிழக அரசு வேறுவழியின்றி தாக்குதலில் ஈடுபட்ட போலீசாரை கைது செய்துள்ளனர். அ.தி.மு.க.வின் அழுத்தம், போராட்டத்தால் வழக்கை சி.பி.ஐ.யிடம் ஒப்படைத்தது.

போலீசாருக்கு வந்த அழுத்தத்தால்தான் அஜித்குமார் தாக்கப்பட்டிருக்கிறார். காவல்துறை தாக்குதலின் பின்னணியில் யாரோ அழுத்தம் கொடுத்துள்ளனர். தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின் சட்டம் ஒழுங்கு சீரழிந்துவிட்டது. தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் இதுவரை 20 ஆணவப்படுகொலைகள் நடந்துள்ளன. அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும் அஜித்குமார் சகோதரர் விரும்பிய இடத்தில் அரசு வேலை வழங்கப்படும். அஜித்குமார் குடும்பத்திற்கு அ.தி.மு.க. சார்பில் ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தியா மீது 25 சதவீதம் வரை வரி விதிப்பு: ட்ரம்ப் எச்சரிக்கை
### நாளை முதல் அமலுக்கு வருகிறது

**வாஷிங்டன், ஜூலை 31-**

இந்தியா மீது 25 சதவீதம் வரை வரி விதிக்கப்படலாம் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். அமெரிக்காவின் பரஸ்பர வரி விதிப்பு வருகிற 1-ம் தேதி அமலுக்கு வரும்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பல்வேறு நாடுகள் மீது பரஸ்பர வரிகளை விதிப்பதாக அறிவித்தார். அதன்பின் வரி விதிப்பை 90 நாட்கள் நிறுத்தி வைப்பதாக அறிவித்த அவர், அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். இதையடுத்து இந்தியா உள்பட பல நாடுகள் அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.



அமெரிக்காவின் பரஸ்பர வரி விதிப்பு வருகிற 1-ம் தேதி அமலுக்கு வரும். இந்தியா-அமெரிக்கா இடையேயான பேச்சுவார்த்தையில் இன்னும் முடிவு எட்டப்படவில்லை. இந்த நிலையில் ட்ரம்ப் தனது ஸ்காட்லாந்து பயணத்தை முடித்து கொண்டு அமெரிக்காவுக்கு விமானத்தில் திரும்பிய போது நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்த வர்த்தக ஒப்பந்தத்துக்கு முடிவு எட்டப்படவில்லை என்றால் 20 முதல் 25 சதவீதம் வரை இறக்குமதி வரியை இந்தியா எதிர்கொள்ளக்கூடும். இந்தியா நல்ல நண்பராக இருந்து வந்தாலும், வேறு எந்த நாடும் வசூலிக்காத அளவிற்கு அமெரிக்காவிடம் வரி வசூலித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக, அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளாத அனைத்து நாடுகளுக்கும் 15 அல்லது 20 சதவீதம் மட்டுமே வரி விதிப்பது குறித்து பரிசீலித்து வந்த நிலையில், கனடாவுக்கு 35 சதவீதமும், அல்ஜீரியா, இலங்கை மற்றும் ஈராக் ஆகிய நாடுகளுக்கு 30 சதவீத வரியும், புரூனே, லிபியா மற்றும் மால்டோவா ஆகிய நாடுகளுக்கு 25 சதவீதமும், பிலிப்பின்சுக்கு 20 சதவீதமும் ட்ரம்ப் அதிரடியாக வரி விதித்தார்.

# தங்கம் விலை மீண்டும் உயர்வு

**சென்னை, ஜூலை 31-**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை புதன்கிழமை பவுனுக்கு ரூ.480 உயர்ந்து ரூ.73,680-க்கு விற்பனையானது.

கடந்த சில நாள்களாக தங்கம் விலை தொடர்ந்து குறைந்த உயர்ந்த வண்ணம் உள்ளது. ஜூலை 19-ல் பவுனுக்கு ரூ.480 உயர்ந்து ரூ.73,360-க்கும், ஜூலை 20-ல் விலை மாற்றமின்றியும் ஜூலை 21-இல் பவுனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.73,440-க்கும், ஜூலை 22-ல் ரூ.840 உயர்ந்து ரூ.74,280-க்கும் விற்பனையானது.

ஜூலை 23-ல் ரூ.760 உயர்ந்து ரூ.75,040-க்கும் விற்பனையாகி புதிய உச்சத்தை தொட்டது. ஜூலை 24-ம் தேதி ஒரே நாளில் அதிரடியாக பவுனுக்கு ரூ.1000 குறைந்து ரூ.74,040-க்கு விற்பனையானது. ஜூலை 25 -ல் பவுனுக்கு ரூ.360 குறைந்து ரூ.73,680-க்கும், ஜூலை 26 -ல் ரூ.400 குறைந்து ரூ.73,280-க்கும், ஜூலை 29-ல் பவுனுக்கு ரூ.80 குறைந்து ரூ.73,200-க்கு விற்பனையானது.

இந்நிலையில், புதன்கிழமை தங்கம் விலை மீண்டும் உயர்ந்து விற்பனையானது. அதன்படி, கிராமுக்கு ரூ.60 உயர்ந்து, ரூ.9,210-க்கும், பவுனுக்கு ரூ.480 உயர்ந்து ரூ.73,680-க்கும் விற்பனையானது. இதேபோல், வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ரூ.127-க்கும், கட்டி வெள்ளி (ஒரு கிலோ) ரூ.1,000 உயர்ந்து ரூ.1.27 லட்சத்துக்கும் விற்பனையானது.

# மதுரையில் நடைபெறும் த.வெ.க மாநாட்டின் தேதியில் மாற்றமா..?
### போலீஸ் தரப்பு கேள்வியால் திடீர் பரபரப்பு

**மதுரை, ஜூலை 31-**

மதுரையில் விஜய் கட்சி மாநாடு தேதியை மாற்ற வேண்டும் என போலீஸ் தரப்பில் வலியுறுத்ததப்பட்டது.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் மாநாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே கடந்த ஆண்டு நடந்தது. 2-வது மாநாட்டை மதுரையில் அடுத்த மாதம் (ஆகஸ்டு) 25-ம் தேதி நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மதுரை-தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் எலியார்பத்தி சுங்கச்சாவடி அருகே பாரபத்தி பகுதியில் மாநாட்டுக்கான பூமி பூஜை கடந்த 16-ம்தேதி நடந்தது. கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் தலைமையில் நிர்வாகிகள் சேர்ந்து மூகூர்த்தகால் நட்டனர். இதனை தொடர்ந்து, மாநாட்டிற்கு அனுமதி கோரி மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அர்விந்தை சந்தித்து மனு அளித்தனர்.

இந்நிலையில், மாநாட்டு ஏற்பாடுகளை ஆய்வு செய்வதற்காக, கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் நேற்று மதுரை வந்தார். அவர், பாரபத்திக்கு சென்று பணிகளை பார்வையிட்டார். இதனை தொடர்ந்து, மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அர்விந்தை சந்தித்தார். மாநாட்டுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து வலியுறுத்தினார்.

அப்போது, 530 ஏக்கர் நிலம் மாநாட்டிற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. இதில் 300 ஏக்கரில் மாநாடு நடைபெறும். மீதமுள்ள இடம் கார் பார்க்கிங் உள்ளிட்ட வசதிகளுக்காக பயன்படுத்தப்பட உள்ளது. ஒன்றரை லட்சத்திற்கும்மேல் தொண்டர்கள் வருவார்கள் என தெரிவித்ததாக தெரிகிறது.

அப்போது போலீஸ் தரப்பில், மாநாடு நடைபெறும் தேதி ஆகஸ்டு 25 என முடிவு செய்து இருக்கிறீர்கள். ஆனால், 27-ம் தேதி விநாயகர் சதுர்த்தி வர இருக்கிறது. அதற்கு போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டி இருப்பதால், மாநாடு நடைபெறும் தேதியை மாற்றி அமைக்க வாய்ப்பு உள்ளதா? என கேள்வி எழுப்பியதாக கூறப்படுகிறது. அதற்கு புஸ்சி ஆனந்த் தரப்பில், நிர்ணயித்த தேதியில் மாநாடு நடைபெற வேண்டும் என எதிர்பார்க்கிறோம் எனக்கூறியுள்ளனர்.

இதனால் குறிப்பிட்ட தேதியில் தமிழக வெற்றிக்கழகத்தின் மாநாடு நடைபெறுமா? அல்லது தேதி மாற்றப்படுமா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. இதுகுறித்து காவல்துறையினரிடம் கேட்டபோது, விநாயகர் சதுர்த்தி வருவதால், மாநாடு தேதியை மாற்றி வைக்க யோசிக்கலாமா என கேட்கப்பட்டதாக தெரிவித்தனர்.

# ரஷ்ய ஏவுகணை தாக்குதலில் உக்ரைன் வீரர்கள் 3 பேர் பலி

**உக்ரைன், ஜூலை 31-**


உக்ரைனின் ராணுவப் பயிற்சித் திடலின் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில், அந்நாட்டின் 3 ராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர்.

உக்ரைனின் செர்னிஹிவ் பகுதியில் அமைந்திருந்த ராணுவப் பயிற்சி மையத்தின் திடலின் மீது ரஷ்யா நேற்று முன்தினம், ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தியுள்ளது. இதில், உக்ரைனின் 3 ராணுவ வீரர்கள் பலியானதுடன், 18 பேர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, ரஷ்யாவின் பாதுகாப்புத் துறை அமைச்சகம் கூறுகையில், செர்னிஹிவ் மாகாணத்தின், ஹொன்சாரிவ்ஸ்கே பகுதியில் அமைந்திருந்த உக்ரைனின் 169-வது ராணுவப் பயிற்சி மையத்தின் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறியுள்ளது.

இந்தத் தாக்குதல்களில், இஸ்காந்தர் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாகவும், அதனால், சுமார் 200 உக்ரைன் வீரர்கள் கொல்லப்பட்டிருக்கவோ அல்லது படுகாயமடைந்திருக்கவோ வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ரஷ்யா மக்கள் குடியிருப்புகள் அதிகமுள்ள பகுதிகளின் மீது தனது தாக்குதல்களை அதிகரித்துள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

மேலும், 78 ராணுவ ட்ரோன்கள், 8 அதி நவீன போர் விமானங்கள் ஆகியவை மூலம் உக்ரைன் நகரங்களின் மீது, நள்ளிரவில் நடத்தப்பட்ட தாக்குதல்களில், 5 பேர் படுகாயமடைந்துள்ளதாக, உக்ரைனின் விமானப் படை தகவல் வெளியிட்டுள்ளது.

**31-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எல்லா வளமும் பெறும் இனிய நாள். உல்லாசப் பயணங்கள் உள்ளம் மகிழும். புதுப்பெண்கள் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுப காரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**ரிஷபம்:-** எதிலும் ஆராய்ந்து வேலையில் இறங்க வேண்டிய நாள். சிரத்தையற்ற செயலால் திறமை இருந்தும் நல்ல பெயர் கிடைக்காது. தொழில் ஆர்வம் கூடுவதால், ஆதாயம் பெருகும்.

**மிதுனம்:-** அன்னையின் ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சி திருவினை யாக்கும் என முயற்சியைக் கைவிடாது, முன்னேற முயலுங்கள் வெற்றி உங்கள் பக்கம்.

**கடகம்:-** அன்பு சகோதரர்களால் அதிக உதவி உண்டு. எடுத்த காரியங்கள் யாவற்றிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**சிம்மம்:-** கல்வியில் வெற்றி பெற கடின உழைப்பு தேவை. கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. மனைவி, மக்களின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை.

**கன்னி:-** குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புத்தாடை அணிகலன்கள் ஆகியவற்றை அணிவார், சாத்திரங்களில் ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும்.தொழில் வளம் பெருகும்.

**துலாம்:-** கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது. எடுத்த காரியங்களில் ஆதாயம் பெற எச்சரிக்கையுடன் நடத்தல் அவசியம். தீய வழிகளில் தேவையற்ற செலவுகளை செய்ய வேண்டியது வரும். சிலருக்கு இடமாற்றம், பணமுடையும் ஏற்படலாம்.

**விருச்சிகம்:-** பெண்களால் தன லாபம் அடைவீர்கள். பிறருக்கு விருந்து உபசாரம் செய்து மகிழ்வார்கள். பிரிந்தவர் கூடிப் பேரின்பம் அடைவது உறுதி. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி கிட்டும்.

**தனுசு:-** தன்னம்பிக்கை, தைரியம் எல்லாம் ஓங்கும். அனைத்து செயல்பாடுகளும் அனுகூலமாய் அமையும். திருப்திகரமான தீர்த்த யாத்திரைகள் மகிழ்வு தரும். புதிய தொழில்கள் தொடங்க சாதகமான சூழ்நிலை அமையும்.

**மகரம்:-** தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். அன்னதானம் போன்ற நற் காரியங்களில் ஈடுபடுவீர்கள். திருவருளாலும், குருவருளாலும் வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். மனதிற்கினிய நல்ல மனைவி அமைவாள்.

**கும்பம்:-** வழக்குகளில் வாய்தா வாங்கிக் கொள்வது நல்லது. மனைவியின் மனம் அறிந்து. செயல்பட்டால் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம். எந்தச் செயலையும் அவசரமின்றி நிதானமாகச் செய்தால் வெற்றி நிச்சயம்.

**மீனம்:-** பண வரவு கூடும். எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும். காதல் வசப்பட்டு களிப்பு எய்துவர். புதிய தொழில் முயற்சிகள் ஈடேறும்.

# எங்கெங்கெல்லாம் நடக்கிறது உங்களுடன் ஸ்டாலின் முகாம்?
### இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்

**சென்னை, ஜூலை 31-**

உங்களுடன் ஸ்டாலின் முகாம் குறித்த தகவல்களை இனிவரும் காலங்களில் இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதற்காக தமிழகம் முழுவதும் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் நடந்து வருகிறது. முதல் கட்டமாக, நடைபெறும் வரும் இந்த முகாம் 15-ந் தேதி வரை நடக்கிறது.

இந்த முகாமில் நகரப் பகுதிகளில் 13 துறைகள் மூலம் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகள் வழியாக 46 சேவைகளும் வழங்கப்படுகின்றனர். வார்டு, வாரியாக நடைபெறும் இந்த முகாம்கள் குறித்து அலுவலர்கள் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்தப்படுகிறது.

அதேபோல தி.மு.க. உள்ளாட்சி பிரதிநிதிகளும் தங்கள் பகுதி முகாம்கள் குறித்து மக்களுக்கு தெரிவித்து வருகின்றனர். அதேவேளையில் https://ungaludanstalin.tn.gov.in/ என்ற இணையதளத்தில் நாளை முகாம்கள் நடைபெறும் இடங்கள் குறித்து ஒரு நாள் முன்னதாக அறிவிப்பு வெளியிடப்பட்டு வந்தது. தற்போது அதில் வரும் நாட்களிலும் எங்கெங்கு முகாம் நடக்கிறது என்று தேதி வாரியாக வெளியிடப்பட்டு வருகிறது.

எனவே பொதுமக்கள் இந்த இணையதளத்தின் மூலம் முகாம்கள் குறித்து தெரிந்து கொள்ளலாம்.

# பாலஸ்தீன் தனி நாடாக அங்கீகாரம்: 15 மேற்குலக நாடுகள் வலியுறுத்தல்

**பாலஸ்தீன், ஜூலை 31-**

பாலஸ்தீனம் தனி நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென, பிரான்ஸ் உள்ளிட்ட 15 மேற்குலக நாடுகள் திட்டமிட்டு, அவர்களுடன் மீதமுள்ள உலக நாடுகளின் அரசுகளும் இணைய வேண்டுமென வலியுறுத்தியுள்ளன.

மேற்கு கரை மற்றும் காஸா நகரத்தின் மீதான, இஸ்ரேலின் தாக்குதல்களினாலும், உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகள் முடக்கப்பட்டுள்ளதாலும், ஏராளமான பாலஸ்தீனர்கள் பலியாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பாலஸ்தீனம் தனி நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென, சர்வதேச அரசுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் பிரான்ஸ் மற்றும் சவுதி அரேபியா தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் இடையில் மீண்டும் இருநாட்டு தீர்வு கொண்டுவரப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, பிரான்ஸ் உள்ளிட்ட 15 நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் நேற்று முன்தினம் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில், அவர்கள் முடிவு செய்த தீர்மானங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

மேலும், அந்த அறிக்கையில், ஸ்பெயின், நார்வே, ஃபின்லாந்து ஆகிய 15 நாடுகளின் அரசுகள், இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையில் இருநாட்டு தீர்வுகள் கொண்டுவர உறுதியாகவுள்ளதாகக் கூறியுள்ளன. இதுகுறித்து, பிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர், ஜீன் நோயல் பார்ரொட் தனது எக்ஸ் தளத்தில் கூறுகையில், பிரான்ஸ் உள்பட 15 நாடுகள் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க விரும்புவதாகவும், இதில், இதுவரை இணையாத மற்ற நாடுகளும், தங்களுடன் இணைய அழைப்பதாகவும், அவர் பதிவிட்டுள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# கடன் மோசடி வழக்கு- நடிகர் பவர் ஸ்டார் சீனிவாசன் கைது



**சென்னை, ஜூலை 31-**

கடன் மோசடி வழக்கு தொடர்பாக நடிகர் பவர் ஸ்டார் சீனிவாசன் கைது செய்யப்பட்டார்.

பிரபல தமிழ் திரைப்பட நடிகர் பவர் ஸ்டார் சீனிவாசனை கடன் மோசடி வழக்கில் டெல்லி பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் கைது செய்துள்ளனர். பவர் ஸ்டார் சீனிவாசன் ரூ.5 கோடி பணத்தை படத் தயாரிப்பு மற்றும் சொந்த செலவுகளுக்கு பயன்படுத்தி மோசடி செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இரண்டு முறை குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட சீனிவாசன் 2018 முதல் தலைமறைவாக இருந்த நிலையில் காவல் துறை கைது செய்துள்ளது.

ரூ.1000 கோடி கடன் வாங்கித் தருவதாகக் கூறி ரூ.5 கோடி பெற்றுக் கொண்டு மோசடி செய்த வழக்கில் போலீசார் சற்றி வளைத்துள்ளனர். சென்னையில் இதேபோல் பவர் ஸ்டார் சீனிவாசன் மீது 6 வழக்குகள் நிலுவையில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# கீழடியை வைத்து சிலர் அரசியல் செய்கின்றனர்

## எடப்பாடி பழனிசாமி பேட்டி



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி நேற்று கீழடி அருங்காட்சியகத்தை பார்வையிட்டார்.

**சிவகங்கை, ஜூலை 31-**

கீழடி தொடர்பாக மாநில அரசு கேட்பவைக்கு நாங்கள் துணை நிற்போம் என்று தெரிவித்துள்ள எதிர்க் கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, கீழடியை வைத்து சிலர் அரசியல் செய் கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 2026 காண சட்டமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இந்த நிலையில், அதிமுக வுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்க உள்ளது. மேலும் கட்சியை வலுப்ப டுத்தும் கட்சியை வலுப்ப டுத்தும் நோக்கிலும், திமுக அரசு செயல்படுத்தாத வாக் குறுதிகள் மற்றும் குறைகள் குறித்து மக்களிடம் எடுத்து ரைக்கும் வகையில்'' தமிழ கத்தை மீட்போம் மக்களை காப்போம்.. ''என்ற பெயரில் மாவட்டம் வாரியாக அதி முக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முற் றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் சிவகங்கை மாவட்டத்திற்கு தற்பொழுது எடப்பாடி பழ னிசாமி சுற்றுப்பயணம் மேற் கொண்டு உள்ளார்.

இந்தநிலையில், கீழடி அருங்காட்சியகத்தை பார் வையிட்ட பின் அதிமுக பொதுச்செயலாளர் எடப் பாடி பழனிசாமி செய்தியா ளர் சந்திப்பில் கூறியதாவது:- இப்போது கீழடியை வைத்து சிலர் அரசியல் செய்கின்ற னர். தமிழனின் பெருமை யை பறைசாற்றுவதே எங் கள் நோக்கம். கீழடி தொடர் பாக மத்திய அரசு கேட்கும் விளக்கத்தை மாநில அரசு கொடுக்க வேண்டும். என்ன விளக்கம் என்பதில் வெளிப் படையாக எதுவும் சொல் லப்படவில்லை என்பதால், இரு பக்கமும் என்ன முரண் நிலவுகிறது என தெரிய வில்லை. இருப்பினும் கீழடி தொடர்பாக மாநில அரசு கேட்பவைக்கு நாங்கள் துணை நிற்போம் என்றார்.

பிஎம் கிசான் திட்டத்தின் கீழ்

# விவசாயிகளுக்கு ஆகஸ்ட் 2-ல் தவணைத்தொகை விடுவிப்பு

**டெல்லி, ஜூலை 31-**

விவசாயிகளுக்கான பிஎம் கிசான் திட்டத்தின் தவணைத் தொகை விடுவிப்பு தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஎம் கிசான் நிதி திட்டத்தை மத்திய அரசு 2019ம் ஆண்டு தொடங்கியது. இந்த திட்டப்படி, சொந்தமாக விவசாய நிலம் வைத்துள்ள விவசாயக் குடும்பங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. 4 மாதத்திற்கு ஒரு முறை தலா ரூ.2000/- வீதம் மூன்று தவணைகளில் ஆண்டுக்கு ரூ.6,000/- விவசாயிக ளின் வங்கிக் கணக்கில் நேரடிப் பணப்பரிமாற்றம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்கீழ் நாடு முழுவ தும் இணைந்த விவசாயிகளுக்கு இதுவரை 19 தவணைகளாக 3.69 லட்சம் கோடி ரூபாய் வங்கி கணக்கு மூலம் வழங்கப் பட்டுள்ளது.

இந்நிலையில், பிஎம் கிசான் திட்டத்தின் 20வது தவணைத் தொகை விடுவிப்பு தேதி இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாடு முழுவதும் 9 கோடியே 70 லட்சம் விவசாயி களுக்கு பிஎன் கிசான் திட்டத்தின் 20வது தவணைத்தொகை வரும் 2ம் தேதி விடுவிக்கப்படுகிறது. 2ம் தேதி உத்தரபிரதே சத்தின் வாரணாசியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பிரதமர் மோடி பிஎம் கிசான் திட்ட பயனாளர்க ளான 9 கோடியே 70 லட்சம் விவசாயிகளுக்கு 20வது தவணைத் தொகையாக 20 ஆயிரத்து 500 கோடி ரூபாயை விடுவிக்கிறார்.

பொய் சொல்வதாக கூறினால் உண்மையும் வெளிவந்துவிடும்:

# அதிபர் ட்ரம்ப் கூறிய விவகாரத்தை தவிர்க்கிறார் பிரதமர் மோடி: ராகுல்

**புதுடெல்லி, ஜூலை 31-**

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போரை தான் நிறுத்தியதாக டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து கூறி வரும் நிலையில், அவர் பொய் சொல்கிறார் என பிரதமர் மோடி கூறிவிட்டால் அனைத்து உண்மைகளும் வெளிவந்துவிடும் என்று ராகுல் காந்தி தெரிவித்துள் ளார். இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற் பட, வர்த்தக வாய்ப்புகளை முன்வைத்து அமெரிக்கா நடத்திய பேச்சுவார்த்தையே காரணம் என 20 முறைக்கும் மேலாக அந்நாட்டின் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித் துள்ளார். மத்திய அரசு இதனை இதுவரை ஏற்க வில்லை.

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக மக்களவையில் நேற்று முன்தினம் விளக்கம் அளித்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "ஆபரே ஷன் சிந்தூர் நடவடிக்கையை நிறுத்துமாறு உலகின் எந்த ஒரு தலைவரும் கூற வில்லை. மே 9-ம் தேதி இரவு அமெரிக்க துணை அதி பர் ஜே.டி. வான்ஸ் தொலை பேசியில் என்னை தொடர்பு கொள்ள முயன்றார். ஒரு மணி நேரம் அவர் முயன் றார். அப்போது நான் நமது ராணுவத்துடன் ஆலோசனை மேற்கொண்டிருந்தேன். என வே, அவரது தொலைபேசி அழைப்பை நான் எடுக்க வில்லை. பிறகு நான் பேசிய போது, மிகப் பெரிய தாக்கு தலை தொடுக்க பாகிஸ்தான் திட்டமிடுகிறது என என்னி டம் அவர் தெரிவித்தார். அதற்கு நான், பாகிஸ்தா னுக்கு அப்படி ஒரு திட்டம் இருக்குமானால், எங்கள் தாக் குதல் அதைவிட பெரியதாக இருக்கும் என்று நான் அவரி டம் தெரிவித்தேன். எனது பதில் அதுவாகத்தான் இருந் தது" என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பாராளு மன்ற வளாகத்தில் செய்தியா ளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, "டொனால்ட் ட்ரம்ப் பொய் சொல்வதாக பிரதமர் மோடி கூறவில்லை. என்ன நடந்தது என்பது எல்லோருக் கும் தெரியும். ஆனால், அவர் களால் அதைச் சொல்ல முடி யவில்லை. அதுதான் பிரச் சினை. டொனால்ட் ட்ரம்ப் குறித்து பிரதமர் மோடி பேசி விட்டால் அதன் பிறகு அனைத்தையும் ட்ரம்ப் கூறி விடுவார். அனைத்து உண் மையும் வெளிவந்துவிடும். அதனால்தான், பிரதமர் மோடி தவிர்க்கிறார்" என தெரிவித்துள்ளார்.

சாதியக் கட்டமைப்பை உடைப்போம்:

# நெல்லை இளைஞர் ஆணவக்கொலைக்கு தி.மு.க. எம்.பி. கனிமொழி கண்டனம்

**நெல்லை, ஜூலை 31-**

நெல்லையைச் சேர்ந்த ஐடி ஊழியர் கவின் ஆணவக் கொலை செய்யப்பட்டதற்கு திமுக எம்.பி. கனிமொழி கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஐடி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த தூத்துக்குடி மாவட்டம் ஆறு முகமங்கலத்தைச் சேர்ந்த கவின், நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை கேடிசி நகரைச் சேர்ந்த பெண் சித்த



மருத்துவரை காதலித்து வந் துள்ளார். இருவரும் வெவ் வேறு சமூகத்தைச் சேர்ந்தவர் கள் என்பதால், அந்தப் பெண் ணின் தம்பி சுர்ஜித் (24), கவினை வெட்டிக் கொலை செய்துவிட்டு காவல் நிலை யத்தில் சரணடைந்தார்.

இந்த சம்பவத்திற்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல ரும் கண்டனம் தெரிவித்தி ருந்த நிலையில் திமுக நாடா ளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கண்டனம் தெரி வித்துள்ளார். இதுபற்றி அவர் தனது எக்ஸ் பக்கத்தில், திருச் செந்தூர் - ஆறுமுகமங்கலத் தைச் சேர்ந்த மென்பொறியா ளர் கவின் செல்வகணேஷ் ஆணவக் கொலை செய்யப் பட்ட செய்தியறிந்து அதிர்ச்சி யும் வேதனையும் அடைந் தேன். சமத்துவத்தையும் காத லையும் மறுக்கும் சாதி ஆண வக் கொலைகளை அடி யோடு ஒழித்திடவும் இறுகிப் போய் கிடக்கும் இச்சமூகத் தின் சாதியக் கட்டமைப்பை உடைத்திடவும் அனைத்து வழிகளிலும் போராடுவோம். கவின் செல்வகணேஷை இழந்துவாடும் அவரது குடும் பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல் என்று பதிவிட்டுள் ளார்.

**கண் தானம் செய்வீர்**

# நீதிபதி யஷ்வந்த் வர்மா பதவி விவகாரம்: பாராளுமன்றம் முடிவு செய்யும்: சுப்ரீம் கோர்ட்

**டெல்லி, ஜூலை 31-**

நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் நடத்தை மீது நம்பிக்கை ஏற் படவில்லை என்றும் அவர் நீதிபதி பதவியில் நீடிப்பது குறித்து பாராளுமன்றம் முடிவு செய்யட்டும் என்று சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.

டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் வீட் டில் இருந்து கடந்த மார்ச் மாதம் கட்டுக்கட்டாக எரிந்த நிலை யில் பணம் கண்டெடுக்கப்பட்ட விவகாரத்தில் தனது பதவி நீக்கம் மற்றும் உள் விசாரணைக்குழுவுக்கு எதிராக யஷ்வந்த் வர்மா உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். கடந்த திங்கள்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு வந்த நிலையில், 'விசாரணைக் குழுவின் விசாரணை நிறைவடைந்து, அதன் அறிக்கை வெளியிடப்படும் வரை இந்த மனுவை தாக்கல் செய்யாமல் காத்திருந்தது ஏன்?' என நீதிபதி யஷ்வந்த் வர்மா விடம் பல்வேறு கேள்விகளை எழுப்பிய உச்ச நீதிமன்றம், மனுவை முறையாகத் தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தியது. தொடர்ந்து நேற்று நீதிபதிகள் தீபாங்கர் தத்தா, ஏ.ஜி.மாசி ஆகி யோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி தத்தா, ''உச்ச நீதிமன்ற தலைமை நீதி பதி ஒன்றும் தபால் நிலையம் அல்ல. நீதித்துறையின் தலை வர் என்ற முறையில் அவருக்கு நாட்டிற்கான கடமைகள் இருக்கின்றன. தவறான நடத்தை தொடர்பான விவகாரங்கள் வரும்போது அவற்றை குடியரசுத் தலைவர் மற்றும் பிரதம ருக்கு அனுப்ப வேண்டிய கடமை அவருக்கு இருக்கிறது'' என்று கூறினார். நீங்கள் ஏற்கெனவே முடிவு எடுத்துவிட்ட தாக யஷ்வந்த் வர்மா தரப்பு வழக்கறிஞர் கபில் சிபல் கூற, அதற்கு நீதிபதி தத்தா, ''நாங்கள் ஏற்கெனவே முடிவை எடுத் திருந்தால் நாங்கள் அமைதியாக இருந்து உங்களை வாதிட அனுமதித்திருப்போம். தீர்ப்பினையும் வழங்கியிருப்போம். ஆனால் அது நியாயமான நீதி அல்ல. அதனால்தான் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். சட்டத்தை நாங்கள் பின்பற்ற வேண்டும்'' என்று கூறினார்.

மேலும் ''நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் நடத்தை மீது நம் பிக்கை ஏற்படவில்லை. உங்கள் நடத்தை பலவற்றை சொல் கிறது. நீங்கள் ஒன்றைக் கண்டுபிடிக்க காத்திருந்து அது கிடைத்தவுடன் இங்கு வந்திருக்கிறீர்கள். நீதிபதி பதவியில் நீடிக்க வேண்டுமா என்பதை பாராளுமன்றம் முடிவு செய் யட்டும்'' என்று கூறி வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் ஒத்தி வைத்துள்ளனர்.

சூதாட்ட செயலி வழக்கு:

# அமலாக்கத்துறை அலுவலகத்தில் நடிகர் பிரகாஷ் ராஜ் நேரில் ஆஜர்

**ஐதரபாத், ஜூலை 31-**

சூதாட்ட செயலி வழக்கு தொடர்பாக அமலாக்கதத்துறை விசாரணைக்கு நடிகர் பிரகாஷ் ராஜ் ஆஜரானார்.

ஐதராபாத் மற்றும் விசாகப்பட்டினத்தில் ஜீட் வின், பரி மேட்ச், லோட்டஸ் 365 உள்ளிட்ட சூதாட்ட செயலிகள் மூலம் சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடந்ததாக புகார் எழுந்தது. இதன் அடிப்படையில், அமலாக்கத் துறையினர் விசாரணை மேற்கொண்டபோது, குறிப்பிட்ட சூதாட்ட செயலிகளின் விளம்பரங்களில் திரைப் பிரபலங்கள் நடித்திருப்பது தெரிய வந்தது. மேலும், பிரபல நடிகர்களின் விளம்பரங்களை நம் பி, சூதாட்ட செயலிகளைப் பயன்படுத்தி ஒருவர் 3 கோடி ரூபாய் வரை பணத்தை இழந்ததாக புகார் தெரிவித்திருந்தார். இந்த விவகாரம் தொடர்பாக, பிரபல நடிகர்களான பிரகாஷ் ராஜ், விஜய் தேவரகொண்டா, ராணா டகுபதி உள்ளிட்ட 29 பிரபலங்கள் மீது அமலாக்கத் துறை வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கின் விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு பிரகாஷ் ராஜுக்கு அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியிருந்தது. அதன் படி, ஐதராபாத்தில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்தில் பிரகாஷ் ராஜ் நேற்று ஆஜரானார். பிரகாஷ் ராஜ் தவிர, ராணா டகுபதி, விஜய் தேவரகொண்டா ஆகியோருக்கும் அமலாக் கத் துறை சம்மன் அனுப்பியிருந்தது. விஜய் தேவரகொண்டா ஆகஸ்ட் 6 ஆம் தேதியும், மஞ்சு லட்சுமி ஆகஸ்ட் 13 ஆம் தேதியும் ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. ராணா டகு பதி ஆஜராக கூடுதல் அவகாசம் கேட்டதால் ஆகஸ்ட் 11 ஆம் தேதி ஆஜராக உத்தரவிட்டுள்ளது.

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்

# பாராளுமன்ற விவாதத்துக்கு எடுத்து கொள்ளப்படமாட்டாது

## மத்திய அமைச்சர் பிரதான் தகவல்

**புதுடெல்லி, ஜூலை 31-**

பீகார் வாக்காளர் பட்டி யல் சிறப்பு தீவிர திருத்த விவகாரம் பாராளுமன்ற விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று மத்திய அமைச்சர் தர் மேந்திர பிரதான் தெரிவித் துள்ளார். இது தொடர்பாக பாராளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தர்மேந்திர பிரதான், ''அரசிய லமைப்பு புத்தகத்தை கையில் வைத்துக்கொண்டு திரிபவர்கள்தான் (ராகுல் காந் தி) அரசியலமைப்புச் சட் டத்தை கேலி செய்கிறார்கள். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்பது தேர் தல் ஆணையத்தின் நடவ டிக்கை. இதை தேர்தல் ஆணையம் பல பத்தாண்டுக ளாக செய்து வருகிறது. வாக் காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை எதிர்ப்பவர்கள் அரசியல் காரணங்களுக்காக எதிர்க்கிறார்கள். இதில் அவர் களின் சொந்த நலன் அடங்கி இருக்கிறது. அவர்களின் எதிர்ப்பு கண்டிக்கத்தக்கது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து விவா திக்கக் கோருவது என்பது தேர்தல் ஆணையத்துக்கு எதி ராக விவாதிப்பதற்கான அ ழைப்பு.

தேர்தல் ஆணையத்துக்கு எதிரான விவாதத்தை மக்கள வையால் தொடங்க முடியு மா? அரசியலமைப்பின் அ மைப்பு முறையை புரிந்து கொள்ளாதவர்களிடம் விவா திப்பதில் பயன் இல்லை என விமர்சித்தார். இதனிடை யே, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிராக பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நேற்றும் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டன. மக்களவை கூடியவு டன் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இந்த விவகாரத்தை எழுப்பி கூச்சலிட்டனர். கேள்வி நேரம் முடிந்த உடன் உங்கள் கோரிக்கை ஏற்கப்படும் என கூறி சபாநாயகர் சமாதானப் படுத்தியதை அடுத்து அவர் கள் அமைதி அடைந்தனர். பாராளுமன்றத்துக்கு வெ ளியே நேற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வாக்காளர் பட்டி யல் சிறப்பு தீவிர திருத்தத் துக்கு எதிராக ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர். பாராளு மன்ற காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட் டோர் இந்த ஆர்ப்பாட்டத் தில் கலந்து கொண்டனர்.



'வெற்றிப்பேரணியில் தமிழ்நாடு' என்ற உறுப்பினர் சேர்க்கைக்கான செயலியை வெளியிட்ட விஜய், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று தலைமுறையினருக்கு த.வெ.க. உறுப்பினர் அட்டையை வழங்கினார்.

# நெல்லையில் இளைஞர் கொலை: குண்டர் சட்டத்தில் சுர்ஜித் கைது

**தூத்துக்குடி, ஜூலை 31-**

தூததுககுடி கவின் கொலை வழக்கில் கைதான சுர்ஜித் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் அருகே உள்ள ஆறுமு கமங்கலம் பகுதியை சேர்ந்த விவசாயி சந்திரசேகர் மகன் கவின்குமார். இவர் சென் னையில் உள்ள ஐ.டி. நிறுவ னத்தில் பனியாற்றி வந்தார். இவரை சுர்ஜித் என்பவர் நெல்லையில் வைத்து அரி வாளால் சரமாரியாக வெட் டிக்கொன்றார். தனது அக்கா விடம் தொடர்ந்து பேசி வந் ததால், ஆத்திரமடைந்து சுர் ஜித், கவின்குமாரை வெட் டிக்கொலை செய்துள்ளார். காதல் விவகாரத்தில் நடந்த இந்த கொலை சம்பவம் நெல்லை மற்றும் தூத்துக்கு டியில் பரபரப்பை ஏற்படுத் தியது. இந்த கொலை சம்ப வத்தில் இளம்பெண்ணின் பெற்றோரான சப்-இன்ஸ் பெக்டர்களாக பணியாற்றி வரும் சரவணனும், கிருஷ் ணகுமாரிக்கும் தொடர்பு இருப்பதாக உயிரிழந்த கவின்குமாரின் குடும்பத்தி னர் குற்றஞ்சாட்டினர். தொடர்ந்து, திருச்செந்தூர்- தூத்துக்குடி சாலை முக்காணி யில் கவினின் உறவினர்கள் மறியல் போராட்டத்தில் ஈடு பட்டனர். இந்த நிலையில், போராட்டம் குறித்து தகவல றிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பொது மக்களிடம் பேச்சு வார்த்தை யில் ஈடுபட்டனர். அப்போது கவின்குமார் கொலை வழக் கில், கொலை செய்த சுர்ஜித் தின் பெற்றோர் 24 மணி நேரத்தில் கைது செய்யப்படு வார்கள் என காவல்துறை சார்பில் உறுதி அளிக்கப்பட் டது. இதனையடுத்து முக் காணி பகுதியில் 3 மணி நேர மாக நடந்த சாலை மறியல் போராட்டம் வாபஸ் பெறப் பட்டது.

இருந்த போதும், எஸ்.ஐ.களாக உள்ள சுர்ஜித் தின் பெற்றோர் இருவரும் கைது செய்யப்பட்ட பிறகே கொல்லப்பட்ட கவினின் உடலைப் பெற்றுக்கொள் வோம் எனவும் கவின்குமா ரின் உறவினர்கள் தெரிவித்த னர். இதனையடுத்து சுர்ஜித் மற்றும் எஸ்.ஐ.க்கள் சரவ ணன், கிருஷ்ணகுமாரி மீது வன்கொடுமை தடுப்புச் சட் டம் உள்ளிட்ட 6 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தனர். இதனை தொடர்ந்து எஸ்.ஐ. தம்பதியான சரவணன், கிருஷ்ணகுமாரியை பணி யில் இருந்து சஸ்பெண்ட் செய்து தமிழ்நாடு சிறப்பு காவல்படை டிஐஜி விஜய லட்சுமி நடவடிக்கை எடுத் தார். இந்த நிலையில் நேற்று நெல்லை மாநகர காவல்து றையினர் சுர்ஜித்தை குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய் துள்ளனர். இதுதொடர்பாக நெல்லை மாநகர காவல் துறை வெளியிட்டுள்ள செய் திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள தாவது:- கடந்த 27ம் தேதி திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை காவல் சரகம், கே.டி.சி.நகர், மங்கம் மாள் சாலை, அஷ்டலட்சுமி நகர் முதல் தெருவில் வைத்து, தூத்துக்குடி மாவட் டத்தைச் சேர்ந்த கவின்செல் வகணேஷ் (வயது 27) என்ப வர் கொலை செய்யப்பட் டார்.

இது தொடர்பாக பாளை யங்கோட்டை காவல் நிலை யத்தில் வழக்குப்பதிவு செய் யப்பட்டு அந்த வழக்கில் தொடர்புடைய பாளையங் கோட்டை, கே.டி.சி.நகர், மங் கம்மாள் சாலையைச் சேர்ந்த சுர்ஜித்(23) கைது செய்யப் பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். இந்த நிலையில் மேற்சொன்ன வழக்கில் சம்பந்தப்பட்டு, பொது ஒழுங்கு பராமரிப் பிற்கு குந்தகம் விளைவிக் கும் செயல்களில் ஈடுபட்ட சுர்ஜித்தை, திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி நேற்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் அடைக்க உத்தரவிட்டுள் ளார். இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# கூட்டணி குறித்து இன்று அறிவிப்பு: ஓ.பன்னீர்செல்வம் பரபரப்பு பேட்டி

**மதுரை, ஜூலை 31-**

விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி வைப் பது தொடர்பாக இன்று பதிலளிக்கப்படும் என ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

2 நாட்கள் பயணமாக தமிழகம் வந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு, 'தூத்துக்குடி விமான நிலையத்தில் உங்களை வர வேற்கவும், வழியனுப்பி வைக்கவும் அனுமதி கிடைத்தால் பெருமையாக இருக்கும்' என்று வெளிப்படையாக கடிதம் எழுதியிருந்தார் ஓ.பன்னீர்செல்வம். இருப்பினும், பிரதமரை சந்திக்க அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. அதே சமயம், எடப்பாடி பழனிசாமி, ஜி.கே வாசன், ஏ.சி. சண்முகம் ஆகி யோர் பிரதமரை சந்தித்து பேசினர்.

இது, ஓ.பன்னீர் செல்வம், மற்றும் அவரது ஆதரவாளர் களை அதிருப்தியில் ஆழ்த்தியது. ஏற்கனவே, தமிழகத்திற்கு வந்த மத்திய உள்துறை மந்திரி அமித் ஷாவும் ஓபிஎஸ்ஸை சந்திக்காமல் தவிர்த்தார்.

இந்த நிலையில், தற்போது பிரதமரும் ஓபிஎஸ்ஸை புறக் கணிப்பது, அவருடைய ஆதரவாளர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் கடந்த சில நாட்களாக தேசிய ஜனநாயக கூட்டணியை முறித்துக் கொண்டு ஓபிஎஸ், தவெ கவுடன் கைகோர்ப்பார் என்று அவருக்கு நெருக்கமான வட் டாரங்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றன. குறிப்பாக, தவெ கவுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும் நிலை யில், அந்த கட்சியில் அனுபவம் மிக்க தலைவர்கள் இல்லா ததால், ஓபிஎஸ்ஸுடன் கூட்டணி வைத்தால் அது அக்கட் சிக்கு பக்கபலமாக இருக்கும் எனவும் பேசப்பட்டது.

இது ஒருபுறம் இருக்க, ஓ.பி.எஸ். தனிக்கட்சி தொடங்க உள்ளதாகவும் செய்திகள் உலா வருகின்றன. பா.ஜ.க. கூட்ட ணியில் இடம் கிடைக்காததால் அடுத்தகட்டம் குறித்து நிர் வாகிகளிடம் ஓ.பன்னீர்செல்வம் ஆலோசனை நடத்தி வருவ தாகவும் கூறப்படுகிறது. இந்தநிலையில், சென்னை செல்வ தற்காக மதுரை விமான நிலையம் வந்த ஓ.பன்னீர் செல்வம் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:- சென்னையில் இன்று காலை செய்தியாளர் சந்திப்பில் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கிறேன். த.வெ.க.வுடன் கூட்டணி உள்ளிட்ட கேள் விகளுக்கு இன்று பதில் சொல்கிறேன் என்றார்.

1967,1977-ம் ஆண்டில் நடந்தது போல்

# தமிழ்நாட்டில் 2026 தேர்தலில் மாற்றம் வரும் - விஜய் பேச்சு

**சென்னை, ஜூலை 31-**

மை டிவிகே செயலியை அறிமுகம் செய்து தவெ க-வின் 2ம் கட்ட உறுப்பினர் சேர்க்கையை சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. தலைமை அலுவலகத்தில் தொடங்கி வைத்தார் விஜய். செயலியில் ஒரு தொலை பேசி எண்ணை பயன்படுத்தி 5 பேரை சேர்க்கலாம். பொது மக்களை தவெக உறுப்பினர் களாக சேர்ப்பதற்கு எந்த ஒரு ஓடிபி-யும் கேட்கபடாது என்று தவெக தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

தவெக உறுப்பினர் சேர்க்கை செயலி வெளி யீட்டு விழாவில் அக்கட்சி தலைவர் விஜய் பேசியதா வது:-

தொடர்ந்து வெற்றி பெற் றவர்களின் அதிகார பலத்தை உடைத்து 1967, 1977 தேர்தல் களில் புதியவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். அது போல, 2026 தேர்தலும் அமையும். 1967,1977, ஆகிய ஆண்டு தேர் தல்கள் திருப்புமுனையாக அமைந்தன. 2026 தேர்தலில் மாற்றம் வரும்.

மக்களுடன் செல், மக்க ளுடன் வாழ் என அண்ணா கூறியதை சரியாக செய் தாலே போதும். அண்ணா வழியில் செல்வோம். வீதிக்கு வீதி வீட்டுக்கு வீடு எல்லோரையும் சந்தித்தவர் களே ஜெயித்தனர். மக்களி டம் செல்வோம், மக்களிடம் இருந்து கற்றுக்கொள்வோம். நாம் இருக்கிறோம், நம்மு டன் மக்கள் இருக்கிறார்கள், இதற்கு மேல் என்ன வேண் டும். அடுத்தது மதுரை தவெக மாநாடு, மக்கள் சந் திப்பு என அடுத்தடுத்து நடக் கவிருக்கிறது. இதற்கு பின் மக்களோடு மக்களாகதான் நாம் இருக்கப்போகிறோம். அதற்காக திட்டமிடுங்கள். இனி மக்களுடன் தான் எனது பயணம் தொடரும். இவ்வாறு அவர் கூறினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



வயநாடு நிலச்சரிவில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்த நிலையில், 17 குடும்பங்கள் அழிக்கப்பட்டதாகவும், சுமார் 1,600 கட்டிடங்கள் தரைமட்டமானது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ மத்திய அரசு ஆதரவு அளிக்காதது வருத்தம் அளிக்கிறது. வயநாடு தொகுதி மக்களின் கடன்களை மத்திய அரசு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**- பிரியங்கா காந்தி**



இந்தியாவுக்கு சட்டப்பூர்வ உரிமையுள்ள செனாப் மற்றும் ஜீலம் நதிகளில் உள்ள நீரை பாகிஸ்தான் பயன்படுத்துகிறது என்பது உண்மைதான். ஆனால், சிந்து நதி நீர் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டதற்கு, நாட்டின் முதல் பிரதமர் மேற்கொண்ட திருப்திப்படுத்தும் அரசியல்தான் காரணம் என்று கூறி இருப்பது உண்மையில் கொடூரமானது.

**- ஜெய்ராம் ரமேஷ்**



ஆதாயத்துக்காக ஒரு கொலை, ஒரு கொலை முயற்சியும்; மதுபோதையில் இரண்டு கொலைகளுமாக அடுத்தடுத்த நாள்களில் நடந்திருக்கும் இப்படியான சமூக சீர்கேட்டை சாதாரணமாக கடந்து போக நினைப்பது ஆட்சியாளர்களுக்கு அழகல்ல. ஆதாயக் கொலைகளைப் போலவே மதுபோதையால் நிகழக்கூடிய கொலைகளும் ஆபத்தானது.

**- ராமதாஸ்**



அண்ணா வழியில் செல்வதற்கு இன்னொரு கட்சி எதற்கு தம்பி? தமிழ்நாட்டில் இனி ஆப்பிற்கும் ஆதரவு கிடையாது, அப்பாவுக்கும் ஆதரவு கிடையாது. வெற்றி பேரணியில் தமிழ்நாடு. நாடகத்திற்கு ஆதரவு கிடையாது. ஏனென்றால் இவர்கள் எப்போதுமே மக்களிடம் இருந்து விலகி இருந்தவர்கள்.

**- தமிழிசை**

# நீலகிரியில் பேரிடர் காலங்களில் பணியாற்ற 400 இளம் தன்னார்வலர்களுக்கு பயிற்சி

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

ஊட்டி, ஜூலை.31-

நீலகிரி மாவட்டத்தில் மழை, வெள்ளம், நிலச்சரிவு மற்றும் மரங்கள் விழுதல் என பேரிடர் காலங்களில் மக்களின் உயிர், உடைமைகளை பாதுகாக்க 400 இளம் தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்;. இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

எனது இளைய பாரதம் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை முகமை இணைந்து பேரிடர் காலங்களில் மக்களின் உயிரையும், உடைமைகளையும் பாதுகாக்கும் வகையில் இளையோருக்கு உரிய பயிற்சிகள் அளித்து தயார்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில், இந்தியாவில் 28 மாநிலங்களில் உள்ள 315 மாவட்டங்களைச் சார்ந்த 47,400 இளையோருக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சி மாநில மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமையுடன் இணைந்து அளிக்கப்படும்.

அதன்படி நீலகிரி மாவட்டத்திலிருந்து 400 இளம் தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளித்து தயார்படுத்தப்பட உள்ளனர். நாட்டு நலப்பணித்திட்டம் மூலமாக 100 தன்னார்வலர்களும், தேசிய மாணவர்படை மூலமாக 200 தன்னார்வலர்களும், நேருயுவகேந்திரா மூலமாக 100 தன்னார்வலர்களும் என மொத்தம் 400 தன்னார்வலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுவோர் கீழ்க்கண்ட தகுதிகளை உடையவர்களாக இருக்க வேண்டும். 18 வயது நிரம்பியவராகவும், 40 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். நீலகிரி மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும். ஏதேனும் ஒன்றில் பதிவு செய்திருக்க வேண்டும். கல்வி தகுதி குறைந்தபட்சம் 7 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நல்ல உடல் தகுதி உள்ளவராக இருக்க வேண்டும். பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஆபத்து, பேரிடர் மற்றும் இயற்கை இன்னல்கள் காலங்களில் உதவும் எண்ணம் கொண்ட மேற்கண்ட தகுதிகளை உடைய தன்னார்வலர்கள் அனைவரும் இப்பயற்சியில் பங்கேற்க விண்ணப்பிக்கலாம். பயிற்சி மூன்று வார காலம் அளிக்கப்படும். உணவு, தங்குமிடம் பயிற்சி ஏற்பாட்டாளர்களால் செய்து தரப்படும். பயிற்சி நிறைவில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் சான்றிதழ் மற்றும் ரூ10,000- மதிப்புள்ள பேரிடர் கால மீட்புக் கருவிகள் வழங்கப்படும். எனவே, பொதுசேவையில் ஆர்வமுள்ள இளையோர் அனைவரும் இப்பயிற்சியில் பங்கேற்று தங்களை தயார் செய்து கொண்டு, பேரிடர் காலங்களில் மக்களுக்கு உதவிடலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேலும், இப்பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்ப படிவங்களை அருகிலுள்ள வட்டாட்சியர் அலுவலகத்திலோ அல்லது கலெக்டர் அலுவலக பேரிடர் மேலாண்மை பிரிவிலோ பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. பயிற்சி குறித்த மேலும் விபரங்களுக்கு 94887 00588 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்



நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் பருவமழையின் காரணமாக பைக்காரா அணை தனது முழுகொள்ளளவை எட்டி கடல் போல் காட்சியளிக்கிறது.

மொடக்குறிச்சி ஒன்றியம் லக்காபுரத்தில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: கலெக்டர் ச.கந்தசாமி ஆய்வு



ஈரோடு,ஜூலை.31-

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், லக்காபுரம், அமுதம் மஹாலில் ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி, ''உங்களுடன் ஸ்டாலின்'' திட்டத்தின் கீழ் முகாம் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இன்றைய தினம் ''உங்களுடன் ஸ்டாலின்'' திட்டத்தின் கீழ் மொடக்குறிச்சி ஒன்றியம், லக்காபுரம், அமுதம் மஹாலில் நடைபெற்ற முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டார். மேலும், பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்கப்பட்டு வருவதையும் பார்வையிட்டு, இதுவரை பெறப்பட்ட மொத்த மனுக்களின் எண்ணிக்கை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களிடம் அவர்களின் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

மேலும், பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களின் அடிப்படையில் உடனடி தீர்வாக அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நாளை (31.07.2025) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3, சங்கர் மஹால், சத்தியமங்கலம் நகராட்சி, திப்புசுல்தான் ரோடு, ஸ்ரீ சுந்தர் மஹால், கூகலூர் பேரூராட்சி, ராதாகிருஷ்ணன் திருமண மண்டபம், வடுகப்பட்டி பேரூராட்சி, நாகராஜபுரம், எ.கே.கே.மஹால், சென்னிமலை ஒன்றியம், பசுவப்பட்டி, அம்மன் காட்டேஜ் மற்றும் பவானி ஒன்றியம், குருப்பநாயக்கன்பாளையம் கவுண்டர் மஹால் ஆகிய இடங்களில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம்கள் நடைபெற உள்ளது.

இம்முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமாசங்கர், மொடக்குறிச்சி வட்டாட்சியர் சிவசங்கர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்

ஈரோடு மாநகராட்சி 9, 12வது வார்டில்

# உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்: மேயர் நாகரத்தினம்,எம்.எல்.ஏ.சந்திரகுமார் பங்கேற்பு



ஈரோடு ஜூலை 31-

ஈரோடு மாநகராட்சி 2-ம் மண்டலத்துக்குட்பட்ட 9 மற்றும் 12 ஆகிய வார்டுகளின் பொதுமக்களுக்காக "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது.

இந்த சிறப்பு முகாமில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் செல்வராஜ், மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) மு.ப.சுப்ரமணியம், ஈரோடு மாநகர செயலாளர் சுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினர் ஆ.ஜெகதீசன், ஜெகநாதன், வனிதாமணி ஜெயக்குமார் முருகேஷ் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு உடனடி தீர்வு காணப்பட்ட பயனாளருக்கு ஆணைகளை வழங்கினார்கள்.

# நீலகிரியில் பூஜிக்கப்பட்ட விநாயகர் சிலைகளை கரைக்கும் இடங்கள்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவிப்பு

ஊட்டி, ஜூலை.31-

நீலகிரி மாவட்டத்தில் பூஜிக்கப்பட்ட விநாயகர் சிலைகளை கரைக்கும் இடங்கள் குறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தொன்றுதொட்டு சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களாகிய நமக்கு மிகப்பெரிய கடமை இருக்கிறது. நீர்நிலைகள் (கடல், ஆறு மற்றும் குளம்) நமக்கு குடிநீர் ஆதாரத்தை தருகிறது. நீர்நிலைகளை பாதுகாக்கும் வகையில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும்போது, விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதற்கான மத்திய மாசுகட்டுப்பாடு வழிகாட்டுதல்களின்படி மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கரைத்து சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே பொதுமக்கள் களிமண்ணால் செய்யப்பட்டதும் மற்றும் பிளாஸ்டர் ஆப்பாரிஸ் , பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் (பாலிஸ்டிரின்) கலவையற்றதுமான சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருள்களால் மட்டுமே செய்யப்பட்டதுமான விநாயகர்சிலைகளை நீர்நிலைகளில் பாதுகாப்பான முறையில் கரைக்க அனுமதிக்கப்படுகிறது. சிலைகளின் ஆபரணங்கள் தயாரிப்பதற்கு உலர்ந்த மலர் கூறுகள், வைக்கோல் போன்றவை பயன்படுத்தப்படலாம். மேலும், சிலைகளை பளபளப்பாக மாற்றுவதற்கு மரங்களின் இயற்கை பிசின்கள் பயன்படுத்தப்படலாம்.

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் தெர்மாக்கோல் பொருட்களை பயன்படுத்த கண்டிப்பாக அனுமதிக்கப்படாது. நீர்நிலைகள் மாசுபடுவதை தடுக்கும் பொருட்டுஇ வைக்கோல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மட்டுமே சிலைகள் தயாரிக்க அல்லது சிலைகள் பந்தல்களை அலங்கரிக்க பயன்படுத்தவேண்டும்.

சிலைகளுக்கு வர்ணம் பூசுவதற்கு நச்சு மற்றும் மக்காத இரசாயனசாயம் எண்ணெய் வண்ணப்பூச்சுகளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. சிலைகளின் மீது எனாமல் மற்றும் செயற்கை சாயத்தை அடிப்படையாக கொண்ட வண்ணப்பூச்சுகளை பயன்படுத்தக்கூடாது மாற்றாக சுற்றுச்சூழலுகுகந்த நீர்சார்ந்த ஃ மக்கக்கூடிய ஃ நச்சு கலப்பற்ற இயற்கை சாயங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். சிலைகளை அழகுபடுத்த வண்ணப்பூச்சுகள் மற்றும் பிற நச்சு இரசாயனங்கள் கொண்ட பொருட்களுக்கு பதிலாக இயற்கை பொருட்கள் மற்றும் இயற்கை சாயங்களால் செய்யப்பட்ட அலங்கார ஆடைகள் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்காணும் இடங்களில் மட்டும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் விதிமுறைகளின்படி கரைக்க அனுமதிக்கப்படும்.

பூஜிக்கப்பட்ட விநாயகர் சிலைகளை குன்னூர் பகுதிக்கு லாஸ் நீர்வீழ்ச்சி, ஊட்டி பகுதிக்கு காமராஜ சாகர் அணை, கூடலூர் பகுதிக்கு இரும்பு பாலம் ஆறு, பந்தலூர் பகுதிக்கு பொன்னானி ஆறு, கோத்தகிரி பகுதிக்கு உயிலட்டி நீர்வீழ்ச்சி ஆகிய இடங்களில் மட்டுமே கரைக்க வேண்டும். விநாயக சதுர்த்தி விழாவினை சுற்றுச்சூழலை பாதிக்காதவாறு கொண்டாடும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு மாவட்ட கலெக்டர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோரை அணுகலாம். இவ்வாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்;.



நீலகிரிமாவட்டம், குன்னூர்உட்கோட்டத்திற்குட்பட்டசிம்ஸ்பார்க்முதல்ஜிம்கானாசெல்லும் மாநில நெடுஞ்சாலையில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த செடி, கொடிகள் வெட்டி, அப்புறப்படுத்தும் பராமரிப்பு பணி உதவி பொறியாளர் பால விஜய் முன்னிலையில், சாலை பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.



ஈரோடு மாவட்டம் அத்தாணி பேரூராட்சியில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை அந்தியூர் தொகுதி எம்.எல்.ஏ. வெங்கடாஜலம் ஆய்வு செய்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.அருகில் பேரூராட்சி தலைவர் புனித வள்ளி செந்தில் கணேஷ் பேரூர் செயலாளர் செந்தில் கணேஷ் பேரூராட்சி செயல் அலுவலர் காசிலிங்கம் மற்றும் பலர் உள்ளனர்.

# ஊஞ்சலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் சிறப்பு உறுப்பினர் கல்வித் திட்ட முகாம்



ஈரோடு ஜூலை 31-

ஊஞ்சலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் செயல் எல்லைக்குட்பட்ட பகுதியில் சிறப்பு உறுப்பினர் கல்வித் திட்ட முகாம் ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் .ப.கந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் உறுப்பினர்களின் இருப்பிடத்திற்கே சென்று சங்கத்தின் செயல்பாடுகள் குறித்தும், சங்கத்தில் வழங்கப்படும் கடன்களான பயிர்கடன், நடைமுறை மூலதனக் கடன், கறைவமாடு வளர்ப்பு கடன், செம்மறியாடு, வெள்ளாடு வளர்ப்பு கடன், பொது நகைக்கடன், சுயஉதவிக்குழு கடன், டாப்செட்கோ கடன், தாட்கோ கடன், மத்தியக் கால கடன், மாற்றுத்திறனாளி கடன் மற்றும் ஒரு தனிநபரிடம் சேகரிக்கப்படும் ரூ.30.00 இலட்சம் வரையிலான வைப்புகள் பற்றியுமான விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் .ஜி.காலிதாபானு துணைப்பதிவாளர் (பயிற்சி) ப.அஜித்குமார் கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர், கூட்டுறவு சார்பதிவாளர்கள், சங்க செயலாளர்கள், முதுநிலை ஆய்வாளர்கள், இளநிலை ஆய்வாளர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் கூட்டுறவு ஒன்றிய பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அனைத்து உறுப்பினர்களுக்கும் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து பேசினார்கள்

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# குன்னூர் வட்டத்தில் இன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறும் பகுதிகள்: கலெக்டர் அறிவிப்பு

ஊட்டி, ஜூலை.31-

குன்னூர் வட்டத்தில் இன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறும் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த விவரமாவது-

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார்.

அதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில், 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

அந்தவகையில், நீலகிரி மாவட்டத்தில் முதற்கட்டமாக'உங்களுடன் ஸ்டாலின் 'திட்ட முகாமானது கடந்த 15.07.2025 முதல் உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர் மற்றும் குந்தா ஆகியவட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் வாரியாக நடைபெற்று வருகிறது.

அதன்படி, இன்று (31.07.2025) குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 15 மற்றும் 16-ற்கான முகாம் பெட்போர்டு, பாரதியார் மண்டபத்திலும், கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட வார்டு 10 மற்றும் 18-ற்கான முகாம் நிவாரணமையம், காந்தி மைதானத்திலும், கோத்தகிரி வட்டம், ஜெகதளா பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 1,2,3,4,13,14 மற்றும் 15-ற்கான முகாம் பெட்டட்டி சமுதாய கூடத்திலும், குன்னூர் வட்டம், பர்லியார் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் காட்டேரி அரசு விதைப்பண்ணையிலும், கோத்தகிரி வட்டம், தேனாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிக்களுக்கான முகாம் கக்குளா சமுதாய கூடத்திலும் நடைபெறவுள்ளது.

நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் மேற்படி முகாம்களில் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கி நடைபெறுவதால் தங்கள் பகுதிக்குச் சென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதியில், அமைந்துள்ள முகாம்களில் மட்டும் கலந்துக் கொண்டு கோரிக்கை விண்ணப்பம் அளிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கேட்டுக் கொண்டுள்ளார்.

# தமிழ்செம்மல் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வரவேற்பு

ஊட்டி, ஜூலை.31-

தமிழ் வளர்ச்சிக்காக சங்கங்கள் வைத்து அரும்பாடுபடும் தமிழ் ஆர்வலர்களைக் கண்டறிந்து அவர்தம் தமிழ்த்தொண்டினைப் பாராட்டி பெருமைப்படுத்தி ஊக்கப்படுத்தும் வகையில் 'தமிழ்ச்செம்மல்' விருதும் விருதினைப் பெறுபவர்களுக்கு ரூ.25,000- பரிசுத்தொகையும் தகுதியுரையும் வழங்கப்பெறும். இவ்விருது மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் வழங்கப்பெறும்.

அவ்வகையில், நீலகிரி மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழ்ச்சங்கங்கள் வைத்து அரும்பாடுபடும் தமிழ் ஆர்வலர்களிடமிருந்து 2025ஆம் ஆண்டிற்கான தமிழ்ச்செம்மல் விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பெறுகின்றன. விருதுக்குரிய விண்ணப்பப் படிவத்தினை தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் விண்ணப்பப்படிவங்கள் என்ற தலைப்பில் உள்ள இணைப்பின் மூலமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிப்பவர்கள் தன்விவரக் குறிப்புடன் நிழற்படம் இரண்டு ஆற்றிய தமிழ்ப்பணி ஆகிய விவரங்களுடன் நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் 29.08.2025ஆம் நாளுக்குள் விண்ணப்பங்கள் மூலவடிவில் அளிக்கப்பெறுதல் வேண்டும். இத்திட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தமிழறிஞர்கள் அனைவரும் விண்ணப்பித்துப் பயன்பெறுமாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கேட்டுக்கொண்டுள்ளார்.

# பொதுமக்களின் புகார் மனுக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு கமிஷ்னர் ஆ.அருண் உத்தரவு



**சென்னை ஜூலை 31**

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண் காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாமில் பொதுமக்களின் 20 புகார் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

**உத்தரவு**

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்று வரும் பொதுமக்கள் குறை தீர் முகாமில், காவல் அதிகாரிகளின் பொதுமக்களின் புகார் மனுக்களை பெற்று விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், நேற்று புதன்கிழமை காவல் ஆணையரகத்தில் புகார் மனு கொடுக்க வந்த பொதுமக்களிடம் இருந்து 20 புகார் மனுக்களை பெற்று, விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டார்.

இம்முகாமின் போது துணை ஆணையர் ஜிசுப்புலட்சுமி, மற்றும் போலீஸ் அதிகாரிகள் உள்ளனர்.

# சென்னை வால்டாக்ஸ் சாலையில் கட்டப்பட்டுவரும் 840 அடுக்குமாடி குடியிருப்புகள், விளையாட்டு பூங்கா, விளையாட்டு மைதானம், திருமண மண்டபம், ஒருங்கிணைந்த வளாகம்

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு



**சென்னை,ஜூலை.31**

சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய இரத்த சுத்திகரிப்பு மையம் 840 புதிய குடியிருப்புகள் புதிய சமூக நலக் கூடம் மற்றும் விளையாட்டுத் திடல் மேம்படுத்துதல் என "ஒருங்கிணைந்த வளாகம்", மூலக்கொத்தளத்தில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடம் மற்றும் ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான பணிகளை துரிதப்படுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தலைவருமானபி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தலைவருமான திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் இருக்கின்ற மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு யாரும் நினைத்து பார்த்திராத அளவிற்கு கனவு திட்டமாக இருந்ததை நினைவாக்கின்ற வகையில் இதே இடத்தில் கடந்த 2024 டிசம்பர் மாதம் 4ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட பணிகள் முன்னேற்றம் குறித்து இன்றைக்கு கள ஆய்வினை மேற்கொண்டோம். அந்த வகையில் துறையினுடைய உறுப்பினர் செயலாளர்.பிரகாஷ் அவர்களும், மாநகராட்சி துணை ஆணையாளர் ரவி அவர்களும், ஏனைய அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து ஆய்வினை மேற்கொண்டு இருக்கின்றோம். ஒரே இடத்தில் சொல்லுவார்கள் அனைத்து வசதிகளுடன் கூடிய பகுதி என்று அதுபோல் 700 குடியிருப்புகள் வறுமை கோட்டிற்கு கீழே வசிக்கின்ற மக்கள், சாலை ஓரம் வசிக்கின்ற மக்கள், கால்வாய் ஓரம் வசிக்கின்ற மக்களுக்கு 400 சதுர அடியும், ஒவ்வொரு வீடும் அமைக்கப்பட இருக்கின்றது.

இந்த 700 குடியிருப்புகள் பணி ஆரம்பிக்கப்பட்ட 8 மாத காலத்தில் விரைவுப் பணிகளாக 7 அடுக்கு தொட்டிருக்கின்றது. இதோடு சேர்த்து விளையாட்டு மைதானம் ஒன்று உருவாக்கப்பட இருக்கின்றது. அந்த விளையாட்டு மைதானத்தோடு இணைந்து ஒரு சமுதாய நலக்கூடம் ஒன்று உருவாக இருக்கின்றது. அதோடு இணைந்து டயாலிசிஸ் சென்டர், மாற்றுத்திறனாளிகளுக்குடான சிகிச்சை நிலையம் போன்றவற்றிற்காக பிரத்யேகமாக ஒரு வடிவமைப்பிற்கு உருவாக இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் இந்த 700 குடியிருப்புகளை தவிர்த்து, மேலும் கூடுதலான இடம் மாநகராட்சியிடம் இருந்ததை தெரிவித்து முதல்வர் அவர்களிடம் உத்தரவை பெற்று கூடுதலாக 140 வீடுகள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு வீடுகளை போன்று சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கட்டப்பட இருக்கின்றது. ஆக மொத்தம் இங்கே 840 குடியிருப்புகள் உருவாக இருக்கின்றது. அதை நேரடியாக வந்து இங்கு கள ஆய்வினை மேற்கொண்டோம்.

ஒரே இடத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள், விளையாட்டு பூங்கா, விளையாட்டு மைதானம், திருமண மண்டபம், டயாலிசிஸ் சென்டர், மாற்றுத்திறனாளிகளுக்கான சிகிச்சை மையம், அரசு அச்சகம் என 7 பணிகள் ஒரே வளாகத்திற்குள் நடைபெறுவது சென்னையில் முதல் முறையாக இதுவாகதான் இருக்கும். இந்த பணியை அதிவேகம் கொண்டு டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிட்டு தொடர்ந்து எங்களுடைய துறையின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி. காகர்லா உஷா அவர்களும், எங்களுடைய உறுப்பினர் செயலாளர் திரு.பிரகாஷ் அவர்களும், சென்னை பெருநகரத்தினுடைய மாநகராட்சி ஆணையாளர் அன்பிற்கினிய திரு.குமரகுருபரன் அவர்களும், துணை ஆணையாளர் திரு. ரவி அவர்களும், பெருநகரத்தின் உடைய மேயர் திருமதி. பிரியா அவர்களும் இந்த மாநகராட்சியின் உடைய மாமன்ற உறுப்பினர் ஆகியோருடன் ஒருங்கிணைந்து, தினந்தோறும் முன்னேற்றப் பணிகளை கண்காணித்து வருகின்றோம். இந்த பகுதியில் இந்த திட்டம் வருகின்றபொழுது பெரிய வரப்பிரசாதமாக இந்த பகுதி அமையும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர்கோ.பிரகாஷ், மாநகராட்சி வட்டார துணை ஆணையாளர்.கட்டா ரவி தேஜா, தலைமை திட்ட அமைப்பாளர்எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர்கள் (சி.எம்.டி.ஏ.) திரு.மகாவிஷ்ணு, லால்பகதூர், கண்காணிப்பு பொறியாளர்கள்.ராஜமகேஷ் குமார்,.பாலமுருகன், திரு.இளம்பருதி, மாநகராட்சி மண்டல நல அலுவலர் டாக்டர் சுப்ரியா, செயற்பொறியாளர்ராஜன்பாபு, சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசு
நீர்வளத்துறை
பெண்ணையாறு வடிநில வட்டம், திருவண்ணாமலை - 3.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | [illegible] | 1002.00 | 08.08.2025 12.00 மணி வரை | 08.08.2025 15.00 மணி | 06 மாதங்கள் |
| 2. | [illegible] | 779.00 | 08.08.2025 12.00 மணி வரை | 08.08.2025 15.30 மணி | 06 மாதங்கள் |

செ.ம.தொ/இ/4000/ஒப்பந்தப்புள்ளி/2025

# வடசென்னை திருவொற்றியூரில் 35 ஆண்டுகள் நிறைவு காணும் சுகம் மருத்துவமனை




**திருவொற்றியூர், ஜூலை 31**

வடசென்னை மக்களின் சேவை பணியில் நன்மதிப்பை பெற்ற திருவொற்றியூர் சுகம் மருத்துவமனை 1991ம் ஆண்டு மே 20ம் தேதி தொடங்கப்பட்டது. இந்த மருத்துவமனையின் தலைமை நிர்வாக இயக்குனராக டாக்டர் டி.பி.டி.சத்தியகுமார், அட்மின் டைரக்டர் ஷீலா சத்தியகுமார் ஆகியோரால் தொடங்கப்பட்டது.

கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு தென்சென்னை குரோம்பேட்டையில் புதியதாக சுகம் மருத்துவமனை தொடங்கப்பட்டது. அதன்பின் கடந்த ஆண்டு அம்பத்தூரில் அதே மருத்துவமனை தொடங்கப்பட்டது. இந்த மூன்று மருத்துவமனையிலும் மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் உள்பட 1000க்கு மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர்.பொது மருத்துவர் ஆன டாக்டர் சத்தியகுமார், மகப்பேறு மருத்துவ நிபுணர் ஆன டாக்டர் ஷீலா சத்தியகுமார் இவர்களுடன் இவருடைய மகன் இதய நேய் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.இமானுவேல்அருண் குமார் மற்றும் அவர்களுடைய மகள் மகப்பேறு மருத்துவர் எஸ்.சிந்தியாகிருபாகரன் இணைந்து சுகம் மெடிக்கல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற அமைப்பின் மூலம் செயல்பட்டு வருகிறார்கள்.

இந்த மருத்துவமனையின் தலைமை நிர்வாக இயக்குனரான டாக்டர் சத்தியகுமார், 2012ம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைகழகத்தால் சிறந்த மருத்துவர் விருது பெற்றவர். 2019ம் ஆண்டு தமிழ்நாடு அரசால் சிறந்த செயல்திறன் விருது வழங்கப்பட்டது. மேலும் 2019ம் ஆண்டு ஏபிஐ அமைப்பால் புகழ்பெற்ற மருத்துவர் நிபுணர் விருது வழங்கப்பட்டது.உலக காசநோய் தினத்தன்று பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் பாராட்டு விருதும் வழங்கப்பட்டது. . டாக்டர் சத்தியகுமாருக்கு 2023ம் ஆண்டிற்கான சமூக சேவை விருதை இந்திய மருத்துவ சங்கம் (ஐ.எம்.ஏ.) வழங்கி கௌரவித்துள்ளது. தி வீக் மாத இதழ் சார்பில் சிறந்த தொழில் முனைவோர் விருதும் வழங்கப்பட்டது.

அதேபோல் 2024ம் ஆண்டிற்கான நம்பக தன்மை வாய் ;ந்த சிறந்த மருத்துவமனை விருது சௌத் மெட்ராஸ் கிளப்பால் வழங்கப்பட்டது. மேலும் டைம்ஸ் ஹெல்த் கேர் சிறப்பு தேர்வு விருது தீவிர சிகிச்சை பிரிவிற்காக வழங்கப்பட்டது.

கொரானா காலத்தில் அர்ப்பணிப்பு சேவைக்காக டாக்டர் ஷீலா சத்தியகுமாருக்கு ரெயின்டிராப்ஸ் அமைப்பினால் முன்னணி போராளி விருதும், மருத்துவ துறையில் மக்களுக்கு வழங்கிய சிறப்பான சேவைக்காக மதுரை இலக்கிய மன்றம் மற்றும் சென்னை ஒய்.எம்.சி.ஏ. இணைத்து டாக்டர் ஷீலா சத்தியகுமாருக்கு மகளிர் சுடரொளி விருது வழங்கப்பட்டது.



சென்னை ராயபுரம் அண்ணா பூங்காவில் நடைபெற்ற ஜேகே சாமி சிலம்ப பயிற்சி கூடத்தின் தகுதி சான்றிதழ் வழங்கும் விழாவில் பங்கேற்ற எம்ஜிஆரின் வளர்ப்பு மகள் கீதா மது மோகனுக்கு ஓட்டல் அதிபர் இளங்கோவன் நினைவுப் பரிசு வழங்கினார். உடன் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் நா.மனோகரன் உள்ளார்.



கீழடி அகழ்வாய்வு அறிக்கையை வெளியிட வலியுறுத்தி சென்னை பழைய வண்ணாரப்பேட்டை தபால் நிலையம் அருகே இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் நேற்று ஆர்பாட்டம் நடத்தினர்.

# இரிடியம் தொழிலில் முதலீடு செய்தால் மும்மடங்கு லாபம் தருவதாக கூறி, ரூ.92 லட்சம் வரை பெற்று, ஏமாற்றியவர் கைது

**சென்னை ஜூலை 31-**

சென்னை, மடிப்பாக்கம், ஆர்.ஆர். நகர் பகுதியில் வசித்து வரும் தட்சிணாமூர்த்தி, என்பவர் சூளையில் வெள்ளி பாத்திரங்கள் தயார் செய்யும் பட்டறை வைத்து நடத்தி வருகிறார். இவருக்கு அறிமுகமான ராஜாராம் என்பவர் மும்பையைச் சேர்ந்த பீர்முகமது பாதுஷா என்பவர் இரிடியம் தொழில் செய்து வருவதாகவும், அதில் முதலீடு செய்தால், மும்மடங்கு லாபம் கிடைக்கும் என்று ஆசை வார்த்தைகள் கூறியுள்ளார். இதனை உண்மையென நம்பிய தட்சிணாமூர்த்தி 2017 முதல் 2024 வரை சிறுக சிறுக என மொத்தம் ரூ.92 லட்சம் பணத்தை பீர்முகமது பாதுஷா என்பவரிடம் கொடுத்துள்ளார். ஆனால் பீர்முகமது பாதுஷா கூறியது போல் பணம் தட்சிணாமூர்த்தியின் வங்கி கணக்கில் ரூ.5 கோடி வரவு ஆகாத காரணத்தினால், தட்சிணாமூர்த்தி தான் கொடுத்த பணத்தை திருப்பி கேட்ட போது, பீர்முகமது பாதுஷா, தட்சிணாமூர்த்திக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இது குறித்து தட்சிணாமூர்த்தி, மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், மோசடி பிரிவில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மடிப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி பீர்முகமது பாதுஷா, என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட பீர்முகமது பாதுஷா என்பவர் இரிடியத்தை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதால் கிடைக்கும் பணத்தை சட்டபூர்வமாக டிரஸ்ட் மூலம் பெற்று அதிக லாபம் தருவதாக கூறியும், புகார்தாரரின் குடும்பத்தினரை மும்பைக்கு வரவழைத்து அவார்டு ஷீல்டு கொடுத்து நம்பிக்கை ஏற்படுத்தியும், பணம் ரூ.5 கோடி வங்கி கணக்கில் வரவு ஆகும் என்று ஆசை வார்த்தை கூறி, அதற்காக ஆர்.பி.ஐ. ஒப்புதல் வாங்க வேண்டும், என்.ஒ.சி. வாங்க வேண்டும் என்று பல்வேறு காரணங்கள் கூறி, சிறுக சிறுக பணம் ரூ.92 லட்சம் பெற்று ஏமாற்றியுள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி பீர்முகமது பாதுஷா விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# திருமங்கலம் பகுதியில் செல்போன் பறிப்பு: ஒருவர் கைது

**சென்னை ஜூலை 31-**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுக்கா பகுதியைச் சேர்ந்த சரவணன்,என்பவர் சென்னை, அண்ணாநகர் மேற்கு பகுதியில் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 27ந் தேதி அன்று காலை, அண்ணாநகர் மேற்கு பகுதியில் உள்ள மில்லினியம் பூங்கா அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு இருசக்கர வாகனத்தில் 2 பேர் மேற்படி சரவணனின் கையில் வைத்திருந்த 1 செல்போனை பறித்துக் கொண்டு, இருவரும் இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றனர். இது குறித்து சரவணன், திருமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். திருமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி மேகசூர்யா, என்பவரை கைது செய்தனர். விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி மேகசூர்யா மீது கொலைமுயற்சி, வழிப்பறி உட்பட சுமார் 15க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் உள்ளதும், இவர் குண்டர் தடுப்பு காவல் சட்டத்தில் சிறையில் சென்று வெளியே வந்துள்ளதும் தெரியவந்தது. மேலும் மற்றொரு எதிரியான கணேசன் என்பவர் மேற்படி செல்போன் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்டு, பின்னர் இருசக்கர வாகனத்தில் கும்மிடிப்பூண்டி அருகே சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துள்ளது தெரியவந்தது.

# கொக்கைன் போதைப்பொருள் வைத்திருந்த வழக்கில் மேலும் இருவர் கைது

சென்னை ஜூலை 31-

சென்னை பெருநகர காவல், போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் மற்றும் வேப்பேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, கடந்த 22.ந் தேதி அன்று மாலை, வேப்பேரி, ஈ.வி.கே. சம்பத் சாலையிலுள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் கண்காணித்து அங்குள்ள ஒரு வீட்டில் விசாரணை செய்து, சோதனைகள் மேற்கொண்டதில், வீட்டில் கொக்கைன் என்ற போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.அதன்பேரில் இது , சென்னை வேப்பேரி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, சட்டவிரோத விற்பனைக்காக கொக்கைன் போதைப்பொருள் வைத்திருந்த இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த சௌரவ் சவுகான் (எ) சௌரவ் ல்யூக்டு, என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months thereafter. I NAKSHATHRAA P G , D/O, PRABHU, AGED 22 YEARS,PERMANENTLY RESIDING AT NO 60/24, SRI BALAJI NAGAR, UPPILIPALAYAM MAIN ROAD, SOUTH COIMBATORE, COIMBATORE, TAMILNADU- 641015. Intend having my enrollment as an advocate moved before the Bar council of Tamil nadu and Puducherry, Bar council building, High court campus, chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar council within 10 days.

NAKSHATHRAA P G

**பொது அறிவிப்பு**

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் வட்டம், சோலூர் பேரூராட்சி கோக்கால், கதவு எண் 75ல் வசிக்கும் பி.பெள்ளன் மகன் பி பேடி ஆகிய நான் தெரிவிப்பது என்னவென்றால் மேற்படி பி.பெள்ளன் அவர்களின் மனைவியும், எனது தாயாருமாகிய திருமதி தேகி அவர்கள் கடந்த 21.05.1993 அன்று மேற்படி எங்கள் வீட்டில் இறந்து விட்டார். அறியாமையின் காரணமாக அவரது இறப்பை பதிவு செய்ய தவறிவிட்டோம். தற்போது அவரது இறப்பு சான்றிதழ் கேட்டு உதகமண்டலம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளேன். இது குறித்து யாருக்காவது ஆட்சேபனை இருந்தால் மேற்படி கோட்டாட்சியர் அலுவலகத்தில் 10 தினங்களுக்குள் தெரிவிக்கலாம்.

பி.பேடி

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months thereafter. I RAJ VIGNESH.S S/O SATHIYAMURTHY.G.N aged 23 years Permanently residing at 12-2 sathy athani main road vaniputhur Thukanaickenpalayam Erode 638506. Intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar Council Building, High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

RAJ VIGNESH .S

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months thereafter. I, PRINITHA JAISHRI E, D/o. M.ELANGO. aged 22 years, permanently residing at B 23 SHRIRAKSHA NIVAS,2ND LANE VGV SRI GARDEN,NEAR POPPYS HOTEL, THIRUMURUGANPOONDI,TIRUPPUR. TAMILNADU-641652 Intend having my enrolment as an advocate moved before the Bar council of Tamil nadu and Puducherry, Bar council building, High court campus, chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar council within 10 days

PRINITHA JAISHRI E

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தமிழ்நாடு அரசு - பொதுப்பணித்துறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.27/2025-2026/க (க & ப) வ -1 / சென்னை / நாள்: 29.07.2025
ஒப்பந்தம் - Lumpsum (இணையதள வழியில் மட்டும்)

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணிமுடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4 | 5. |
| | ஒரு உறை முறை | | | |
| 1 | திருவள்ளூர் மாவட்டம், வடமதுரையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 2 வகுப்பறைகள், ஒரு ஆண்கள் கழிப்பறை, ஒரு பெண்கள் கழிப்பறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | ரூ.88.50 இலட்சங்கள் | ரூ.55,000/- 5 (ஐந்து) மாதங்கள் | பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற வகுப்பு -4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |
| 2. | திருவள்ளூர் மாவட்டம் கிளாம்பாக்கத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 3 வகுப்பறைகள், ஒரு ஆண்கள் கழிப்பறை மற்றும் ஒரு பெண்கள் கழிப்பறை கட்டும் பணி | ரூ.86.70 இலட்சங்கள் | ரூ. 54,000/- 6 (ஆறு) மாதங்கள் | |
| 3. | திருவள்ளூர் மாவட்டம் தோமூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 4 வகுப்பறைகள் கட்டும் பணி | ரூ.91.40 இலட்சங்கள் | ரூ.56,000/- 6 (ஆறு) மாதங்கள் | |
| 4. | திருவள்ளூர் மாவட்டம், திருரில் உள்ள அரசு மாதிரிப் பள்ளியில் 3 வகுப்பறைகள் கட்டும் பணி | ரூ.111.00 இலட்சங்கள் | ரூ.66,000/- 5 (ஐந்து) மாதங்கள் | |
| 5. | திருவள்ளூர் மாவட்டம் கனகம்மாசத்திரத்தில் உள்ள அரசு மேனிலைப் பள்ளியில் 2 வகுப்பறை கட்டிடம், ஒரு ஆண்கள் கழிப்பறை, ஒரு பெண்கள் கழிப்பறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | ரூ.76.74 இலட்சங்கள் | ரூ.49,000/- 5 (ஐந்து) மாதங்கள் | |
| 6. | திருவள்ளூர் மாவட்டம் கே.ஜி.கண்டிகையில் உள்ள அரசு மேனிலைப் பள்ளியில் 4 வகுப்பறை கட்டிடம், 1 ஆண்கள் கழிப்பறை, குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | ரூ.149.08 இலட்சங்கள் | ரூ.85,000/- 6 (ஆறு) மாதங்கள் | |

குறிப்பு: 1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.http://tntenders.gov.in 2.பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 14.08.2025. 3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 20.08.2025 முற்பகல் 10.00 மணி வரை 4.பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 20.08.2025 முற்பகல் 11.00 மணி 5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்

கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம் -1, சேப்பாக்கம், சென்னை-5.

செ.ம.தொ.இ / 3971 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட (க&ப ) வட்டம் திருவாரூர்–1.
ஒப்பந்த வகை : ஒட்டு மொத்தம் / இனவிலைமுறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 16/(க&ப)/வட்டம்/திருவாரூர்/2025–26. நாள்: 29.07.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க&ப) வட்டம், திருவாரூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து 2 பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. திருவாரூர் மாவட்டத்தில் - 1 பணி மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில் - 1 பணிக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : 04.08.2025 முதல் 18.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை.
3. ஒப்பந்தபுள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : 18.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 19.08.2025 முற்பகல் 11.00 மணி முதல்.

கண்காணிப்புப் பொறியாளர் பொபது.,
கட்டட (க&ப) வட்டம் திருவாரூர்–1.

செ.ம.தொ.இ/3905/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர்
மொத்த விலை (இனவிலை முறை)
மின்னனு முறை குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.25/BCM/CBE/2025–26/நாள்.28.07.2025

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மின்னணு கொள்முதல் வலைதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளி கண்காணிப்புப்பொறியாளர், பொபது., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர் அவர்களால்; (1) கோயம்புத்தூர் மாவட்டம், **தென்பொன்முடி** E.A.B அரசு மேல்நிலைப் பள்ளியில் 6 வகுப்பறைகள் கட்டும் பணி. (2) கோயம்புத்தூர் மாவட்டம், **சின்னத்தடாகம்** அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 5 வகுப்பறைகள் கட்டும் பணி (3) கோயம்புத்தூர் மாவட்டம், **கடம்பாடி** அரசு உயர்நிலைப் பள்ளியில் 4 வகுப்பறைகள் கட்டும் பணி (4) நீலகிரி மாவட்டம், **பிதிர்காடு** அரசு மேல்நிலைப் பள்ளியில் 4 வகுப்பறைகள் கட்டும் பணி (5) நீலகிரி மாவட்டம், **தேவர்சோலை** அரசு மேல்நிலைப் பள்ளியில் 5 வகுப்பறைகள் கட்டும் பணி (6) நீலகிரி மாவட்டம், **சேரம்பாடி** அரசு மேல்நிலைப் பள்ளியில் 6 வகுப்பறைகள் கட்டும் பணி. (7) திருப்பூர் மாவட்டம், **கருவலூர்** அரசு மேல்நிலைப் பள்ளியில் 5 வகுப்பறைகள் கட்டும் பணி (8) திருப்பூர் மாவட்டம், **அவிநாசி** அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 5 வகுப்பறைகள் கட்டும் பணி. (9) திருப்பூர் மாவட்டம், **சரவணபுரம்** அரசு மேல்நிலைப் பள்ளியில் 5 வகுப்பறைகள் கட்டும் பணி (10) திருப்பூர் மாவட்டம், **சர்கார் பெரியபாளையம்** அரசு உயர்நிலைப் பள்ளியில் 5 வகுப்பறைகள் கட்டும் பணி (11) திருப்பூர் மாவட்டம், **அலங்கியம்** அரசு மேல்நிலைப் பள்ளியில் 4 வகுப்பறைகள் கட்டும் பணி. (12) திருப்பூர் மாவட்டம், **புதுப்பை** அரசு மேல்நிலைப் பள்ளியில் 4 வகுப்பறைகள் கட்டடம் கட்டும் பணிகளுக்கு பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து, ஒப்பந்தப்புள்ளி இணையவழி முறையில் பெறப்பட்டு, இனவிலை முறை ஒப்பந்தப்புள்ளி அரசு மின்னணு கொள்முதல் வலைத்தளத்தில் (e-procurement portal of Government of Tamil Nadu) 13.08.2025 பிற்பகல் 03.00 மணி வரை பதிவேற்றம் பெற்று அன்றே பிற்பகல் 03.30 மணி முதல் திறக்கப்படும்.

இதர அனைத்து விவரங்களும் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/ மாறுதல்கள் இருப்பின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

கண்காணிப்புப்பொறியாளர், பொபது.,
கட்டட கட்டுமானம் & பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர்.

செமதொஇ/3900/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், ஈரோடு–11
மொத்த விலை (இனவிலை முறை)
மின்னனு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். NIT: 11 / 2025–26/கட்டட (க & ப) வட்டம் / ஈரோடு /நாள். 29.07.2025

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் தமிழ்நாடு அரசின் மின்னணு கொள்முதல் வலைதளம் மூலமாக கண்காணிப்புப்பொறியாளர், பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், ஈரோடு, அவர்களால் தமிழ்நாடு பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து (வகுப்பு IV மற்றும் அதற்கு மேலும்) **"ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் ஒரு புதிய நவீன சமையற்கூடம் அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பல்நோக்கு அரங்கத்தினை உணவருந்தும் கூடமாக மாற்றியமைக்கும் பணி (மதிப்பீடு தோராயமாக ரூ. 200.00 இலட்சங்கள்)" க்கு இனவிலை முறை மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் 14.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை** வரவேற்கப்படுகின்றன. பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **14.08.2025 பிற்பகல் 3.30 மணி அளவில்** திறக்கப்படும்.

இதர அனைத்து விபரங்கள் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்கண்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கண்காணிப்புப்பொறியாளர், பொபது.,
கட்டட (க&ப) வட்டம், ஈரோடு–11

செமதொஇ/3986/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை, கட்டடம் (க & ப) வட்டம், திருச்சி -1
இனவிலை முறை
ஒப்பந்தவகை : ஒட்டுமொத்தம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 15 க.பொ/ க (க & ப) வட்டம் / திருச்சி / 2025-2026 / நாள் : 29.07.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடம் (க&ப) வட்டம் திருச்சி-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூன்று பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு பணிகளுக்கான மற்றும் அரியலூர் மாவட்டத்தில் ஒரு பணிக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : 04.08.2025 முதல் 19.08.2025 மாலை 3.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : 19.08.2025 மாலை 3.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 20.08.2025 மாலை 3.30 மணி முதல்.
5. மேலும் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிவிக்கப்படும்.
6. தள ஆய்வு சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பம் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கப்படும் 4 நாட்களுக்கு முன்னர் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அவர்களை சென்றடைய வேண்டும்.
7. தள ஆய்வு சான்றிதழ் பெற சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அல்லது இணை அதிகாரிகளுடன் சென்று தள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.
8. தள ஆய்வு சான்றிதழ் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் கடைசி தேதிக்கு ஒரு நாள் முன்பு வரை சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கண்காணிப்புப் பொறியாளர், பொபது
கட்டட (க & ப) வட்டம், திருச்சி -1

செ.ம.தொ.இ /3979/ ஒப்பந்தப்புள்ளி /2025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட (க & ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை- 600 005.
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 16 கட்டட (க & ப) வட்டம் 2, 2025-26, நாள் : 29.07.2025
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை: மொத்த வகை/இன விலை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க & ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை-600 005 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்கான குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை | பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை | காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு |
|---|---|---|---|---|
| 1. | சென்னை - 600 005, காமராஜர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடம், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நினைவிடம் மற்றும் அருங்காட்சியகத்தில் டிஜிட்டல் தொழில் நுட்ப அனுபவத்திற்கான 2025-2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு மற்றும் விரிவான சேவைகள் செய்யும் பணி. **முன் வைப்பு தொகை: ரூ. 83,800/-** | ரூ.147.43 இலட்சங்கள் | 8 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்குமேல் |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. பணித்தள வருகை சான்றிதழுக்கான விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட செயற் பொறியாளரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் 04.08.2025.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 06.08.2025 மாலை 03.00 மணி வரை
4. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 06.08.2025 மாலை 04.00 மணி

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை-600 005.

செ.ம.தொ.இ/ 3931 /ஒப்பந்தப்புள்ளி/2025

## கடைசி டெஸ்ட் ஓவலில் இன்று தொடக்கம்:

# இந்திய அணியில் ஆகாஷ் தீப்



**லண்டன், ஜூலை 31-**

இந்தியா தொடரைச் சமன் செய்வதற்கும் இங்கிலாந்து தொடரை 3-1 என்று கைப்பற்றுவதற்குமான 5வது டெஸ்ட் போட்டி இன்று ஓவலில் தொடங்குகிறது. இத்தகைய முக்கியமான தொரு போட்டியில் இந்திய அணியின் முன்னணிப் பந்து வீச்சாளர் பும்ராவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு பதிலாக ஆகாஷ் தீப் அணிக்குள் வருகிறார்.

**ஆச்சரியமில்லை...**

நீண்ட கால உடல்தகுதியை முன்னிட்டு பும்ராவின் காயங்களிலிருந்து காக்கவும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மருத்துவக் குழுவினர் பும்ராவிடம் தெரிவித்துள்ளனர். ஏற்கெனவே பும்ரா 3 டெஸ்ட் போட்டிகளில்தான் ஆடுவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த அறிவிப்பு ஆச்சரியமில்லை என்றாலும் ஒரு முக்கியமான போட்டியில் அதுவும் இங்கிலாந்து பேசியப் பேச்சிற்கும் கடந்த போட்டியில் கடைசியில் ஜடேஜா, சுந்தரை அவமானப்படுத்தும் விதமாக ஹாரி புரூக்கை விட்டு பந்து வீசச் செய்ததற்கும் பழிதீர்க்கும் போட்டியில், தொடரை டிரா செய்ய வேண்டிய வெற்றியை நோக்கியப் போட்டியில், பும்ராவை உட்கார வைப்பது உண்மையில் அதிர்ச்சியளிப்பதாகவே உள்ளது.

**ஆட்டம் டிரா ஆனது...**

எட்ஜ்பாஸ்டனில் பும்ரா இல்லாமல் வெற்றி பெற்றதையடுத்து அவரை உட்கார வைக்கும் அதிர்ஷ்ட செண்டிமெண்ட் விளையாடுகிறது என்று நம்புவதற்கும் இடமுண்டு. பும்ரா விளையாடி முதல் டெஸ்ட்டில் இந்திய அணி தோற்றது, பிறகு லார்ட்ஸில் தோற்றது, இதில் இரண்டிலும் பும்ரா ஆடினார். ஓல்ட் டிராபர்ட் டெஸ்ட் போட்டியில் 3வது இன்னிங்ஸில் இந்திய அணி எழுச்சி பெற்றதையடுத்து ஆட்டம் டிரா ஆனது.

**பந்து வீச்சிலும் சதம்...**

இந்தத் தொடரில் மொத்தம் 18 சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன, வரலாறு காணாத ரன்கள் குவிக்கப்பட்டுள்ளன. இதில் பும்ராவின் பணிச்சுமை 3 டெஸ்ட் போட்டிகளில் என்றாலும் சுமை அதிகமே. ஓல்ட் டிராபர்டில் 33 ஓவர்களை பும்ரா வீசினார் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் ஒரு இன்னிங்ஸில் இவ்வளவு ஓவர்கள் வீசியதே இல்லை. முதல் முறையாக பந்து வீச்சிலும் அவர் சதமெடுத்தது ஓல்ட் டிராபர்ட் டெஸ்ட்டிலேயே.

**ஓய்வு கொடுக்காமல்...**

இத்தகைய பிட்ச்களில் அவரை ஆடவிட்டு ஒழித்து விடக்கூடாது என்பது சரிதான், அவரும் மணிக்கு 140 கிமீ வேகப்பந்திலிருந்து வெகுவாகக் குறைத்தே வீசினார். நடப்புத் தொடரில் இவரும் சிராஜும் 14 விக்கெட்டுகளைக் கைப்பற்றி சமநிலை எய்தியுள்ளனர். சிராஜ் மட்டும் என்ன பாவம் செய்தார் என்று தெரியவில்லை, ஒரு டெஸ்ட் கூட ஓய்வு கொடுக்காமல் ஆடவைக்கின்றனர். குடும்பங்களில் சம்பாதிக்கும் மூத்த மகனுக்கு தனி ட்ரீட்மெண்ட் நடக்குமே அதுதான் பும்ராவுக்கு இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**சிராஜ், ஆகாஷ் தீப்...**

ஆகாஷ் தீப் காயம் காரணமாகக் கடந்த டெஸ்ட்டில் ஆடவில்லை, இப்போது காயத்திலிருந்து மீண்டு பிராக்டீஸ் கிரீன் டாப் பிட்ச்களில் அருமையாக ஸ்விங் செய்கிறார். எப்படியாயினும் சிராஜ், ஆகாஷ் தீப், அர்ஸ்தீப் சிங் இந்த முறை ஆடுவார்கள் என்றே தெரிகிறது. ரிஷப் பந்த் ரூல்டு அவுட் என்பதால் அவருக்குப் பதிலாக துருவ் ஜுரெல் விக்கெட் கீப்பர்/பேட்டராக இணைவார். பொதுவாக மேகமூட்ட வானிலை ஆங்காங்கே பிட்சில் தெரியும் கொஞ்சமான புற்கள் நிச்சயம் இந்தப் போட்டியிலும் குல்தீப் யாதவ்வை களமிறக்க வாய்ப்பில்லை என்றே தெரிகிறது.

## 5-வது டெஸ்ட் போட்டி:

# பென்ஸ்டோக்ஸ் திடீர் விலகல்



**ஓவல், ஜூலை 31-**

இந்தியாவுக்கு எதிரான 5-வது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து கேப்டன் பென்ஸ்டோக்ஸ் திடீரென விலகியுள்ளார். இன்று நடைபெறும் போட்டியில் 4 மாற்றங்களை இங்கிலாந்து அணி செய்துள்ளது.

**இன்று தொடக்கம்...**

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 5-வது டெஸ்ட் போட்டி இன்று தொடங்க உள்ளது. 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. 5-வது டெஸ்டில் வென்றால் மட்டுமே தொடரை சமன் செய்ய முடியும் என்பதால் இந்தப்போட்டியில் வென்று தொடரை சமன் செய்யும் முனைப்பில் இந்திய அணி தீவிரமாக உள்ளது.

**விளையாட மாட்டார்..**

அதேவேளையில், போட்டியை சமன் செய்தாலே தொடரை வெல்ல முடியும் என்பதால் இங்கிலாந்து அணியின் வெற்றி முனைப்பில் இருக்கிறது. இந்த நிலையில், இங்கிலாந்து அணிக்கு பெரிய பின்னடைவாக நாளை தொடங்கும் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து கேப்டன் பென்ஸ்டோக்ஸ் விளையாட மாட்டார் என்று இங்கிலாந்து அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

**தோள்பட்டையில்...**

தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக பென்ஸ்டோக்ஸ் விளையாட மாட்டார் எனவும் அவருக்கு பதிலாக ஒல்லி போப் அணியை வழிநடத்துவார் என்றும் இங்கிலாந்து அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. . மேலும் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சரும் இந்த போட்டியில் இருந்து விலகி உள்ளார். பென் ஸ்டோக்ஸ் மற்றும் ஆர்ச்சர் இல்லாதது இந்திய அணிக்கு சாதகமானது.

இது தவிர இன்றைய போட்டியில் பங்கேற்கும் பிளேயிங் லெவனில் மேலும் 3 மாற்றங்களை இங்கிலாந்து அணி செய்துள்ளது.

### இங்கிலாந்து அணி:

ஜோப்ரா ஆர்ச்சர், லியாம் டாசன் மற்றும் பிரைடன் கார்ஸ் ஆகியோர் விளையாட மாட்டார்கள் எனவும் அவர்களுக்கு பதிலாக கஸ் அட்கின்சன், ஜேக்கப் பெத்தேல், ஜேமி ஓவர்டன், ஜோஷ் டோங்கு.

# புதிய பயிற்சியாளராக அருண்

லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் புதிய பந்து வீச்சு பயிற்சியாளரா பரத் அருண் நியமிக்கப்பட்டுள்ளார். ஐபிஎல் தொடரில் மூன்று முறை சாம்பியனான கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக இருந்த பரத் அருண், 2022 ஆம் ஆண்டில் இருந்து நிகழாண்டு வரை சிறப்பாக பணியாற்றினார். இந்திய அணிக்கு பந்துவீச்சு பயிற்சியாளராக இருந்த பரத் அருண் தலைமையின் கீழ், கொல்கத்தா அணி 2022 ஆம் ஆண்டில் சாம்பியன் பட்டத்தையும் வென்றிருந்தது.

சஞ்சீவ் கோயங்காவின் லக்னோ அணிக்கு 62 வயதான பரத் அருண், 2 ஆண்டுகள் பந்துவீச்சு பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கடந்த ஐபிஎல் தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய லக்னோ அணியின் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் தொடர்ந்து செயல்படுவாரா? என்பது கேள்விக்குறியாகியுள்ளது. இதனால், பரத் அருண் தலைமைப் பயிற்சியாளராகவும் நியமிக்க வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முதலிடத்தை இழந்தார் மந்தனா

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது. இதில் பேட்டிங் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த இந்திய வீராங்கனை ஸ்மிருதி மந்தனா ஒரு இடம் பின்தங்கி இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். மேற்கொண்டு தென் ஆப்பிரிக்க வீராங்கனை லாரா வோல்வார்ட்டும் ஒரு இடம் பின் தங்கி மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். அதேசமயம் இங்கிலாந்து மகளிர் அணி கேப்டன் நாட் ஸ்கைவர் பிரண்ட் இரண்டு இடங்கள் முன்னேறி முதலிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளார்.

இங்கிலாந்து தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணி கேப்டன் ஹர்மன்ப்ரீத் கவுர் 10 இடங்கள் முன்னேறி 11ஆம் இடத்திற்கும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் இரண்டு இடங்கள் முன்னேறி 13-ம் இடத்தையும் பிடித்துள்ளனர். பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் முதல் 10 இடங்களில் எந்த மாற்றமும் இன்றி இங்கிலாந்தின் சோபி எக்லெஸ்டோன் முதலிடத்திலும், ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னர் இரண்டாம் இடத்தையும், மேகன் ஷட் 3-ம் இடத்திலும், இந்திய அணியின் தீப்தி சர்மா நான்காம் இடத்தையும் தக்கவைத்துள்ளனர்.

# காஷ்மீரில் ஆபரேஷன் சிவசக்தி: 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

**ஸ்ரீநகர், ஜூலை 31-**

ஆபரேஷன் சிவசக்தி பெயரில் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஜம்மு-காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள எல்லைப்பகுதியில் நேற்று இரண்டு பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) இரவு பூஞ்ச் மாவட்டத்தின் தேக்வார் செக்டாரின் கல்சியன்-குல்பூர் பகுதியில், இரண்டு முதல் மூன்று பயங்கரவாதிகள் ஊடுருவ முயல்வதாக பாதுகாப்புப் படைக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து, பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையை தொடங்கிய நிலையில், இரு தரப்புக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது.

இது குறித்து இந்திய ராணுவத்தின் 16-வது படைப்பிரிவு வெளியிட்ட அறிக்கையில், "தீவிரவாதிகளின் ஊடுருவல் தடுப்பு நடவடிக்கையான ஆபரேஷன் சிவசக்தி மூலமாக, இந்திய ராணுவத்தின் படைகள் எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே ஊடுருவ முயன்ற இரண்டு பயங்கரவாதிகளை சுட்டுக் கொன்றனர்." என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் வெற்றிக்கு ஜம்மு காஷ்மீர் காவல் துறையினரும் பங்களித்ததாகவும், தீவிரவாதிகள் எதிர்ப்பு நடவடிக்கையின்போது அவர்களிடமிருந்து மூன்று ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர். பூஞ்ச் மாவட்டத்தில் தீவிரவாதிகள் தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முன்னதாக, கடந்த ஜூலை 28-ம் தேதி ஜம்மு - காஷ்மீரில் இந்திய ராணுவம், சிஆர்பிஎஃப் மற்றும் மாநில போலீஸார் இணைந்து நடத்திய 'ஆபரேஷன் மகாதேவ்' நடவடிக்கையில் 3 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட 3 தீவிரவாதிகள் சுலைமான் என்கிற ஃபைசல், ஹம்சா அப்ஹான், ஜிப்ரான் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில், பஹல்காம் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்ட லஷ்கர்-இ-தொய்பாவின் கமாண்டர் சுலைமான் என்பது குறிப்பிடத்தக்கது. ஜிப்ரான், ஹம்சா அப்ஹான் இருவரும் பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது. மேலும், கடந்த ஆண்டு சோனமார்க் சுரங்கப்பாதை தாக்குதலில் ஈடுபட்டவர்கள் ஜிப்ரான் மற்றும் ஹம்சா அப்ஹான் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

# லாலு மீதான வழக்கு விசாரணையை ஒத்திவைக்க சுப்ரீம் கோர்ட் மறுப்பு

**புதுடெல்லி, ஜூலை 31-**

ரயில்வே வேலைக்கு நிலம் லஞ்சமாக பெற்ற வழக்கில் ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத் யாதவ் மீதான விசாரணையை ஒத்திவைக்க சுப்ரீம் கோர்ட் மறுத்துவிட்டது.


ராஷ்டிரிய ஜனதா தளம் தலைவரும், பிஹார் முன்னாள் முதல்வருமான லாலு பிரசாத் யாதவ், கடந்த 2004-ம் ஆண்டு முதல் 2009-ம் ஆண்டு வரை ரயில்வே அமைச்சராக பதவி வகித்தார். அப்போது மேற்கு மத்திய ரயில்வேயில் குரூப் டி பிரிவில் வேலை வழங்குவதற்கு பிஹாரில் நிலத்தை லஞ்சமாக பெற்றதாக லாலு மீது குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக லாலுவுக்கு எதிராக சிபிஐ வழக்குப் பதிவு செய்தது.

இந்நிலையில், விசாரணை நீதிமன்றம் வழக்கை விசாரிக்க தடை கோரி சுப்ரீம் கோர்ட்டில் லாலு பிரசாத் மேல்முறையீடு செய்தார். இந்த மனு சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ் மற்றும் என்.கோடீஸ்வர் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் கடந்த ஜூலை 18-ம் தேதி விசாரணைக்கு வந்தது. அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், விசாரணை நீதிமன்றம் லாலு மீதான வழக்கை விசாரிப்பதற்கு தடை விதிக்க மறுத்துவிட்டனர். இருப்பினும், இந்த வழக்கு விசாரணைக்காக லாலு பிரசாத் யாதவ் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிப்பதாகவும் தெரிவித்து லாலு பிரசாத் யாதவின் மனுவை தள்ளுபடி செய்தனர்.

இந்த நிலையில், நேற்று சுப்ரீம் கோர்ட்டில் லாலு பிரசாத் யாதவ் தாக்கல் செய்த புதிய மனுவில், ஆகஸ்ட் 12 ஆம் தேதி வரை விசாரணையை ஒத்தி வைக்கக் கோரினார். சிபிஐ தனக்கு எதிராக அனுப்பிய சம்மனை எதிர்த்து தாக்கல் செய்த மனுவை, உயர் நீதிமன்றம் வரும் ஆகஸ்ட் 12 அன்று விசாரிக்கவுள்ளதாகவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ் மற்றும் என்.கோடீஸ்வர் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு, விசாரணை நீதிமன்றத்தின் விசாரணையை ஒத்திவைக்க நீதிபதிகள் மறுத்துவிட்டனர்.

# தமிழ்நாடு பா.ஜ.க.வில் குஷ்புக்கு முக்கிய பதவி

## மாநில துணைத்தலைவராக நியமனம்



**சென்னை, ஜூலை 31-**

பா.ஜ.க. மாநில துணைத்தலைவராக குஷ்புவை மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் நியமனம் செய்துள்ளார்.

தமிழ்நாடு பாஜகவில் புதிய மாநில நிர்வாகிகளை நியமித்து மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் அறிவித்துள்ளார். பாஜக தேசியத் தலைவர் ஜே.பி. நட்டாவின் ஒப்புதலுடன், தமிழக பாரதிய ஜனதா கட்சிக்கு புதிய மாநில நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார். அதன்படி, பாஜக மாநில துணைத் தலைவராக குஷ்பு நியமனம் செய்யப்பட்டுள்ளார். பொதுச் செயலர்களாக கேசவ விநாயகம், ராம ஸ்ரீனிவாசன், முருகானந்தம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், பாஜக மாநில துணைத் தலைவர்களாக எம். சக்கரவர்த்தி, வி.பி. துரைசாமி, டாக்டர் கே.பி. ராமலிங்கம், சசிகலா புஷ்பா, பால் கனகராஜ் உள்ளிட்டோரும் நியமிக்கப்பட்டுள்ளதாக, அக்கட்சியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநிலச் செயலர்களாக கராத்தே தியாகராஜன், கே. வெங்கடேசன் உள்ளிட்ட 15 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வி.பி. துரைசாமி, கரு நாகராஜன் உள்ளிட்டோரும் மாநில துணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மாநில அமைப்பாளராக கே.டி. ராகவன், எம். நாச்சியப்பன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


## இந்தியா-பாக்., போட்டி நடக்குமா..?

ஓய்வு பெற்ற கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கும் 2-வது உலக சாம்பியன்ஸ் ஆப் லெஜண்ட்ஸ் 20 ஓவர் லீக் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதன் கடைசி லீக் போட்டியில் இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின. இதில் முதலில் விளையாடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 144 ரன்கள் அடித்தது. இதனையடுத்து 145 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 13.2 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 148 ரன்கள் அடித்து வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் 4-ம் இடம் பிடித்து அரையிறுதிக்கு இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

அவ்வகையில் முதல் அரையிறுதி போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. 2-வது அரையிறுதி போட்டியில் தென் ஆப்பிரிக்கா - ஆஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன. முன்னதாக இந்த தொடரின் லீக் ஆட்டத்தில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதுவதாக இருந்தது. ஆனால் அப்போட்டியில் விளையாட இந்திய அணி வீரர்கள் மறுத்ததால் ஆட்டம் ரத்து செய்யப்பட்டது. ஆகவே அரையிறுதியில் பாகிஸ்தானுடன் இந்திய அணி விளையாடுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

## புதிய கார் தொழிற்சாலை திறப்பு: வரும் 4-ம் தேதி

# முதல்வர் தூத்துக்குடி பயணம்



**சென்னை, ஜூலை 31-**

தூத்துக்குடியில் ரூ.1,119.67 கோடியில் 114 ஏக்கரில் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ள மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலையையும், அதன் விற்பனையையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் ஆகஸ்ட் 4-ம் தேதி தூத்துக்குடிக்கு நேரில் சென்று திறந்து வைக்க உள்ளார்.

உலகின் முன்னணி மின்சார வாகனத் தயாரிப்பு நிறுவனமான வியட்நாம் நாட்டைச் சேர்ந்த வின்பாஸ்ட் நிறுவனம் தூத்துக்குடியில் ரூ.16,000 கோடியில் மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலையை அமைக்க ஒப்பந்தம் செய்தது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் சென்னையில் கடந்த 2024-ம் ஆண்டு நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டது.

இதைத்தொடர்ந்து கார் உற்பத்திக்கான ஆலை அமைப்பதற்கு தூத்துக்குடி சில்லாநத்தம் சிப்காட் பகுதியில் 408 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தத் தொழிற்சாலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். முதற்கட்டமாக ரூ.1,119.67 கோடியில் 114 ஏக்கரில் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஆண்டுக்கு 1.50 லட்சம் வாகனங்களை உற்பத்தி செய்ய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இந்த தொழிற்சாலையை ஆகஸ்ட் 4-ந்தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று திறந்து வைக்க உள்ளார். இதற்காக ஆகஸ்ட் 3-ந்தேதி சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கு விமானத்தில் செல்ல இருக்கிறார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று சிவகங்கையில் உள்ள தனியார் திருமணமண்டபத்தில், வெளிநாடுவாழ் இயதியர்கள், விளையாட்டுவீரர்கள், பயதயம், வடமாடு மஞ்சுவிரட்டு நலச் சங்கம், தென்னை நார் உற்பத்தியாளர்கள் நலச் சங்கம் மற்றும் மண்பாண்டம் உற்பத்தியாளர்கள் நலச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் கலயதுரையாடினார்.

# காவிரி குண்டாறு திட்டம் அ.தி.மு.க. ஆட்சி வந்தவுடன் நிறைவேற்றப்படும்

## பரமக்குடியில் இ.பி.எஸ். பிரசாரம்

**பரமக்குடி, ஜூலை 31-**

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று இரவு பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற முழக்கத்துடன் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அதையொட்டி பரமக்குடி பஸ் நிலையம் பகுதியில் திரண்டு இருந்த மக்கள் மத்தியில் அவர் பேசியதாவது:-பரமக்குடி நகரத்துக்குள் நுழையும் பொழுதே எங்களுடைய வாகனம் மக்கள் வெள்ளத்தில் நீந்தி வந்தவாறு இருந்தது.வரும் சட்டமன்ற தேர்தலில் பரமக்குடி தொகுதியில் நம்முடைய கூட்டணி வெற்றி பெறும். அதற்கு இங்கு திரண்டு இருக்கும் மக்களே சாட்சி. தி.மு.க. ஆட்சிக்கு வந்து 50 மாதங்கள் ஆகிவிட்டது. ஆனால் மக்களுக்கு எந்த பயனும் இல்லை. குடும்ப ஆட்சி தான் தமிழ்நாட்டில் நடக்கிறது.

அ.தி.மு.க. ஆட்சியில் கைத்தறிக்கென்று தனி ஆதரவு திட்டம் உருவாக்கப்பட்டது. கைத்தறி நெசவாளர்களுக்கு 300 கோடி ரிப்பேட் அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டது. 2019ல் புதிய ஜவுளி கொள்கை கொண்டு வரப்பட்டது. 2 கோடி மதிப்பில் பன்னாட்டு ஜவுளி கண்காட்சி ஏற்படுத்தப்பட்டது.ஜவுளி பூங்காக்கள் உருவாக்கப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் லாபத்தில் இருந்தது. ஆனால் தற்போது தி.மு.க. ஆட்சியில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் நலிந்து போய் மூடும் நிலையில் உள்ளது.

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அம்மா மினி கிளினிக்குகள் தொடங்கப்பட்டு ஏழை, எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அரசியல் காழ்புணர்ச்சியால் தற்போது அவைகள் மூடப்பட்டுள்ளன. மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி வந்தவுடன் அவைகள் தொடங்கப்படும்.14 ஆயிரத்து 400 கோடியில் காவிரி - குண்டாறு திட்டத்தை அ.தி.மு.க. ஆட்சியின் போது கொண்டு வந்தோம். அதற்கு முதல் கட்டமாக 700 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை நிறைவேற்றி இருந்தால் அனைத்து கண்மாய்களிலும் தண்ணீர் நிரம்பி இருக்கும்.

மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி மலரும். காவிரி குண்டாறு திட்டம் நிறைவேற்றப்படும். அனைத்து கண்மாய்களிலும் தண்ணீர் நிரப்பப்படும். இது எங்கள் லட்சியமாகும். இவ்வாறு பேசினார். முன்னதாக மாவட்ட எல்லையான மரிச்சுக் கட்டியில் மாவட்ட கழக செயலாளர் எம்.ஏ. முனியசாமி, மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் கீர்த்திகா முனியசாமி, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் டாக்டர் முத்தையா, சதன் பிரபாகர் ஆகியோர் எடப்பாடி பழனிச்சாமியை வரவேற்று நினைவு பரிசுகள் வழங்கினர்.

# கடந்த மூன்றரை ஆண்டுகளில் 3 ரயில்வே கிராசிங் விபத்துகள்

## மத்திய அமைச்சர் அஸ்வினி தகவல்

**புதுடெல்லி, ஜூலை 31-**

மூன்றரை ஆண்டுகளில் 3 ரயில்வே கிராசிங் விபத்துகள் நடந்துள்ளதாக மத்திய அமைச்சர் அஸ்வினி தெரிவித்துள்ளார். கடலூர் ரயில் விபத்து சம்பவத்தில், உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் உறவினர்களுக்கு ரூ.11 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் 3 ரயில்வே கிராசிங் விபத்துகள் மட்டுமே நிகழ்ந்துள்ளதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். சமீபத்தில் கடலூரில் பள்ளி வாகனம் மீது ரயில் மோதி ஏற்பட்ட விபத்து தொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்டது. இதற்கு மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதிலளித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது ;-

கடந்த 8-ந்தேதி தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தில், தெற்கு ரயில்வே திருச்சிராப்பள்ளி கோட்டத்தின் விழுப்புரம்-மயிலாடுதுறை பிரிவு கேட் எண் 170-ல் பள்ளி வாகனம் மீது ரயில் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 3 பேருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டன.

இந்த விபத்து குறித்து விசாரிக்க விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டு ஜூலை 20-ம் தேதி வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் ரயில்வே கேட் கிராசிங் பகுதிகளில் 3 விபத்துகள் மட்டுமே நிகழ்ந்துள்ளன. 2022-23 முதல் 2024-25 வரையிலான கடந்த மூன்று ஆண்டுகளில், ரயில்வே கிராசிங் விபத்துகளில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் உறவினர்களுக்கு ரயில்வே நிர்வாகம் மொத்தம் ரூ.16 லட்சம் நிவாரணம் வழங்கியுள்ளது. கடலூர் ரயில் விபத்து சம்பவத்தில், உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் உறவினர்களுக்கு ரூ.11 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது 11,096 ரயில்வே லெவல் கிராசிங் கேட்டுகள் இன்டர்லாக்(Interlock) செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், மொத்தம் உள்ள 1,255-ல் தற்போது வரை 1,053 ரயில்வே லெவல் கிராசிங் கேட்டுகள் இன்டர்லாக் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் மேலும் 72 லெவல் கிராசிங்குகளில் இன்டர்லாக் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடலூரில் 92 லெவல் கிராசிங்குகள் உள்ளன, அவற்றில் 11 லெவல் கிராசிங்குகளை சாலை மேம்பாலம் மற்றும் சாலைக்குக் கீழ் செல்லும் பாலங்கள் மூலம் நீக்குவதற்கு அனுமதிக்கப்பட்டன. இருப்பினும், தமிழக அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்படாததால், 7 பாலங்களுக்கான பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தரவரிசை: அபிஷேக் முதலிடம்

ஐசிசி டி20 தரவரிசையில் அபிஷேக் சர்மா முதலிடம் பிடித்து அசத்தியுள்ளார். டி20 தரவரிசையில் நான்காவது இந்தியராக இந்த மைல்கல்லை எட்டி சாதனை படைத்துள்ளார். பஞ்சாபில் அமிர்தசரஸைச் சேர்ந்த அபிஷேக் சர்மா (24 வயது) இந்திய டி20 அணியில் 2024இல் அறிமுகமானார். இதுவரை இந்திய அணிக்காக 17 போட்டிகளில் 535 ரன்கள் எடுத்துள்ளார். இவரது பேட்டிங் சராசரி 33.43ஆக இருக்க, ஸ்டிரைக் ரேட் 193.84ஆக இருப்பது குறிப்பிடத்தக்கது.

கடைசியாக கடந்த பிப்ரவரியில் இங்கிலாந்துக்கு எதிராக விளையாடினார். பின்னர், ஐபிஎல் போட்டிகளில் மட்டுமே விளையாடினார். பிறகு, எப்படி முதலிடம் பிடித்தார் தெரியுமா? டிராவிஸ் ஹெட் புள்ளிகள் குறைந்ததால் அபிஷேக் சர்மா முதலிடம் பிடித்துள்ளார். ஐசிசி டி20 பேட்டிங் தரவரிசை வருமாறு., 1. அபிஷேக் சர்மா - 829 புள்ளிகள் (இந்தியா), 2. டிராவிஸ் ஹெட் - 814 புள்ளிகள் (ஆஸி.), 3. திலக் வர்மா - 804 புள்ளிகள் (இந்தியா), 4. பிலிப் சால்ட் - 791 புள்ளிகள் (இங்கிலாந்து), 5. ஜாஸ் பட்லர் - 772 புள்ளிகள் (இங்கிலாந்து).

# வத்தலக்குண்டு அருகே உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**வத்தலக்குண்டு, ஜூலை 31-**

திண்டுக்கல்மாவட்டம் வத்தலக்குண்டு அருகே மல்லனம்பட்டியில் உங்களுடன் .ஸ்டாலின் திட்ட முகாம் நடந்தது. வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் மல்லனம்பட்டியில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் துவக்க விழாவுக்கு நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி தலைமை வகித்தார். வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குப்புசாமி, மணிமாற பாண்டியன், மாவட்ட ஊராட்சி செயலர் ஜெயச்சந்திரன் , திமுக ஒன்றிய செயலாளர்கள் கே.பி.முருகன், கனிக்குமார்,கனகதுரை, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார், புவனேஸ்வரிஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் வத்தலக்குண்டு வருவாய் ஆய்வாளர் பரிமளம், கிராம நிர்வாக அதிகாரி பாலமுருகன் மற்றும் வருவாய், மின்சாரம், வேளாண், சமூக நலம், கூட்டுறவு உள்ளிட்ட 15 துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் துறை ரீதியான மனுக்களை பெற்றுக் கொண்டு உடனுக்குடன் ஆன்லைன் மூலம் பதிவு செய்தனர். முகாமில் சகாப்தின், வழக்கறிஞர் வினோத் கண்ணா, ஆரோக்கியசாமி, செல்வகுமார், ஆறுமுகம், ராதாகிருஷ்ணன்,நாகூர்,சபேஷ் பொதுமக்கள் உள்பட உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். பொதுமக்களிடமிருந்து 813 மனுக்கள் பெறப்பட்டது, பாதுகாப்பு ஏற்பாடுகளை வத்தலக்குண்டு போலீசார் செய்திருந்தனர்.

முடிவில் வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர் நாச்சியப்பன் நன்றி கூறினார்.

# நத்தம் அருகே உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்



**நத்தம், ஜூலை 31-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குடகிப்பட்டி ஊராட்சி மணக்காட்டூரில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடந்தது. இதற்கு திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டி அம்பலம், ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார் சேக் சிக்கந்தர்பாட்சா, நகர செயலாளர் ராஜ்மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த முகாமில் மகளிர் உரிமை தொகை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூகநலத்துறை, வீட்டுவசதி உள்ளிட்ட 13 அரசு துறைகளின் சார்பில் மனுக்கள் பெறப்பட்டது. முகாமில் திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமார்சாமி, தாசில்தார் ஆறுமுகம், யூனியன் ஆணையாளர்கள் கிருஷ்ணன், மகுடபதி, மண்டல துணை வட்டாட்சியர்கள் சுந்தரபாண்டியன், பொன்னுச்சாமி உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும் இந்த முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு 45 நாட்களில் தீர்வு காணப்படும் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒட்டன்சத்திரம், ஐ.வாடிப்பட்டியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**ஒட்டன்சத்திரம், ஜூலை 31-**

தமிழகம் முழுவதும் மக்களின் குறைகளை வீட்டுக்கே வந்து கேட்டறிந்த தீர்வு காணும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது, அதன் ஒரு பகுதியாக திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் ஐ.வாடிப்பட்டி ஊராட்சியில் பழனி கோட்டாட்சியர் கண்ணன் தலைமையில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி முகாமில் மனு கொடுத்த நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு உடனடியாக முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு அட்டை, கலைஞர் கனவு இல்லம் பயனாளிகளுக்கு ஆணைகள், தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டது. நிகழ்வில் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் சஞ்சய் காந்தி, கலைஞர் வீடு வழங்கும் திட்ட உதவி திட்ட அலுவலர் பிரபாகரன், வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் காமராஜ்,பிரபு பாண்டியன், தி.மு.க.மாவட்ட துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர் ஜோதீஸ்வரன், நிர்வாகிகள் முருகானந்தம் பிரபு உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாற்றுத்திறனாளிகள் விவரங்கள் சேகரிக்கும் பணி: மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா தகவல்

**விருதுநகர், ஜூலை 31-**

தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்காக அரசின் சார்பில் நலத்திட்டங்கள் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று சேரும் வகையில் உலக வங்கி நிதியுடன் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் நமது மாவட்டத்தில் இல்லந்தோறும் சென்று அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளையும் கண்டறிந்து அவர்களது முழு விவரங்கள் அடங்கிய சமூக தரவுதளத்தை உருவாக்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் முன் களப்பணியாளர்கள் மூலம் வீடுவீடாக சென்று கணக்கெடுப்பு நடத்தி மாற்றுத்திறனாளிகள் குறித்த விவரங்களை சேகரிக்கும் பணி நடைபெறவுள்ளது. கணக்கெடுப்பிற்காக ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட சமூக சேவை வழங்கும் நிறுவனங்கள் மூலம் முன் களப்பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தகணக்கெடுப்புப் பணி ஜூன் 2-ஆம் தேதி முதல் துவங்கி வருகிற ஆகஸ்டு மாத இறுதிக்குள் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடத்தப்படும் இக்கணக்கெடுப்பிற்காக தங்கள் வீடுகளுக்கு வரும் முன் களப்பணியர்களுக்கு பொதுமக்கள் அனைவரும் தகுந்த ஒத்துழைப்பு அளித்து கணக்கெடுப்பு பணிசிறப்பாக நடைபெற உதவுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா கேட்டுக்கொண்டுள்ளார்.

# நத்தத்தில் வாராஹி அம்மன் கோவிலில் கருட பஞ்சமி பூஜை



**நத்தம், ஜூலை 31-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டூர் அண்ணாமலையார் கோவிலில் அமைந்துள்ள மகா வாராஹி அம்மன் கோவிலில் கருட பஞ்சமியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது.

இதையொட்டி மகாவாராஹி அம்மனுக்கு திருமஞ்சனம், பால், பழம், சந்தனம், தயிர் உள்ளிட்ட 16 வகையான பொருட்களால் திரவிய அபிஷேகமும்,சிறப்பு அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர்.தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கபட்டது. இதைப்போலவே கோவில்பட்டி அக்ரஹாரத்தில் பாமாருக்மணி வேணு ராஜகோபாலசுவாமி கோவிலில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள வாராஹி அம்மன், அசோக்நகர் பகவதி அம்மன் கோவிலில் உள்ள வாராஹி அம்மன் கோவில்களிலும் கருட பஞ்சமியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# கமுதி அரசு நூலகத்தில் படித்த மாணவர் சாதனை



**கமுதி, ஜூலை 31-**

ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் அரசு முழுநேர நூலகம் இயங்கி வருகிறது. இதில் கமுதி சுற்று வட்டார மாணவர்கள், இளைஞர்கள் அதிகளவில் வருகைபுரிந்து மத்திய, மாநில அரசு நடத்தும் போட்டித்தேர்வுக்கு படித்து வருகின்றனர். அதில் பயின்று வந்த கண்ணார்பட்டியை சேர்ந்த மாணவர் வெங்கடேஸ்வரன் என்ற மாணவர் 2024 ம் ஆண்டு நடைபெற்ற டிஎன்பிஎஸ்சி குருப் 2A போட்டித் தேர்வில் கலந்து கொண்டு வெற்றி பெற்று தமிழக அளவில் 186-வது நபராகவும், சமூக உட்பிரிவு அளவில் 38 -வது நபராக தேர்ச்சி பெற்றார்.

அவருக்கு பணிக்கான கலந்தாய்வு நடைபெற்றது அதில் இராமநாதபுரம் மாவட்டத்தில் - உள்ளூர் நிதி தணிக்கை உதவி ஆய்வாளர் பணி கிடைத்துள்ளது அவரை கமுதி அரசு முழுநேர கிளை நூலகத்தின் நூலகர் கண்ணதாசன் நேரில் அழைத்து வாழ்த்தினார் மற்றும் வாசகர்கள், பொதுமக்கள், பயிற்சி மாணவ, மாணவிகள் அனைவரும் வாழ்த்து தெரிவித்தனர்.

# சேவுகம்பட்டி பேரூராட்சியில் மாதாந்திர வளர்ச்சி கூட்டம்



**வத்தலகுண்டு, ஜூலை 31-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு ஒன்றியம் சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கூட்டம் எம். வாடிப்பட்டியில் உள்ள பேரூராட்சி அலுவலகத்தில் நடந்தது. இந்த கூட்டத்திற்கு பேரூராட்சி தலைவர் வனிதா தங்கராஜன் தலைமை தாங்கினார்.

துணைத்தலைவர்தெய்வராணிவிஜயன் முன்னிலை வகித்தார். செயல் அலுவலர் ரமேஷ் பாபு வரவேற்றார்.

இந்த கூட்டத்தில் எம். வாடிப்பட்டி 6வது வார்டில் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலை கடை கட்டுதல், எம்.வாடிபட்டியில் அரசு புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வரும் 17 பேருக்கு வீட்டு மனை பட்டா வழங்க நடவடிக்கை எடுத்தல், 10வது வார்டு முத்தலாபுரத்தில் ரூ.9 லட்சம் மதிப்பீட்டில் பம்பு செட்டுடன் ஆழ்குழாய் மற்றும் பைப் லைன் அமைத்தல், 8வது வார்டு முத்தலாபுரம் மெயின் ரோட்டில் ரூ 12 லட்சம் மதிப்பீட்டில் சிறு பாலத்துடன் கூடிய வடிகால் அமைத்தல் உள்ளிட்ட 12தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன சேவுகம்பட்டி பேரூராட்சியில் உள்ள அனைத்து வார்டு கவுன்சிலர்கள் கலந்து கொண்டார்கள். முடிவில் இளநிலை உதவியாளர் அம்மமுத்து நன்றி கூறினார்.

கலாம் நினைவகம் முதல் அக்னிதீர்த்தம் கடற்கரை வரை

# ரூ.150 கோடி மதிப்பில் சாலை பணிகள்: அமைச்சர் ஏ.வா.வேலு நேரில் ஆய்வு

**ராமேசுவரம், ஜூலை 31-**

ராமேஸ்வரத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்களின் வாகனங்களின் போக்குவரத்து நெரிசலில் இருந்து தவிர்ப்பதற்கு ராமேஸ்வரத்தில் இருந்து 10 கிலோமீட்டர் முன்பே உள்ள அப்துல் கலாம் நினைவகம் பகுதியில் இருந்து ஆறு கிலோமீட்டர் தொலைதூரத்திற்கு பல கோடி ரூபாய் மதிப்பில் அக்னி தீத்தம் கடக்கறை வரை புறவழிச் சாலை அமைய உள்ள பகுதியை அமைச்சர் எ.வ வேலு நேற்று ஆய்வு செய்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

ராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் பல்வேறு துறைகளில் நடைபெற்று வரும் திட்ட பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்கும் புதியதாக கட்டப்பட்ட துறைமுக அலுவலகத்தை திறந்து வைப்பதற்கும் தமிழக பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வருகை தந்தார். முதலாவதாக நிகழ்ச்சியில் ராமேஸ்வர் இந்திய கடற்படை முகாம் அருகாமையில் தமிழ்நாடு கடல்சார் வாரியம் மூலம் ரூ.4.19 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட துறைமுக அலுவலக கட்டிடத்தை குத்துவிளக்கேற்றி வைத்து திறந்து வைத்து அதன் உட்கட்டமைப்புகளை பார்வையிட்டார்.அதனைத் தொடர்ந்து இராமேஸ்வரத்தில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் நனைபெற்று வரும் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மூன்று தளங்களுடன் கூடிய மருத்துவமனை கட்டடத்தின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து அக்னி தீர்த்தம் ஓலைகுடா சாலையில் தமிழ்நாடு கடல்சார் வாரியம் மூலம் படகு இல்லம் ரூ.7.88 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களின் நினைவிடத்திலிருந்து இராமேஸ்வரம் அக்னி தீர்த்தம் கடற்கரை வரை புறவழிச்சாலை அமைப்பதற்கான திட்டப்பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு. ஆர்.செல்வராஜ்.தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர்/துணைத்தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வெங்கடேஷ்,மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜித் சிங் காலோன், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம்,பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் தழமுருகேசன்,கடல்சார் வாரிய மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன்,துறைமுக அலுவலர் கேப்டன் மானேக் ஷா ,பொதுப்பணித்துறை (கட்டடங்கள்) தலைமைப் பொறியாளர் (மதுரை மண்டலம்) செல்வராஜ் கண்காணிப்பு பொறியாளர் அரசு, கண்காணிப்பு பொறியாளர் (தரகட்டுப்பாடு) பாலமுருகன்,செயற்பொறியாளர் குருதிவேல் மாறன் நெஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர்,முருகன் , இராமேஸ்வரம் நகர் மன்றத்தலைவர். நாசர்கான், துணைத்தலைவர் தெட்சிணா மூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற 4 ஆண்டுகளில் கடந்த ஆட்சியாளர்களால் தொடர்ந்து 10 ஆண்டுகளாக தென் மாவட்டங்களை புறக்கணித்து வந்ததை கருத்தில் கொண்டு இப்பகுதிகள் வளர்ச்சி பெற பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து வளர்ச்சித் திட்டப்பணிகள் நடைபெற்றுள்ளது. அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் வளர்ச்சி திட்ட பணிகள் கூடுதலாக நிதி ஒதுக்கீடு மூலம் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் சிறு துறைமுகங்கள் துறை மூலம் இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு கப்பல் இயக்குவதற்கான கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு பயன்பெறும் வகையில் தற்பொழுது ரூ.4.19 கோடி மதிப்பீட்டில் மூன்று தளங்களுடன் கூடிய அலுவலக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் கப்பல் போக்குவரத்து திட்டத்திற்கு பயனுள்ளதாக இருக்கும். மேலும் சாகர்மாலா திட்டத்தின் மூலம் ரூ.118 கோடி மதிப்பீட்டில் கூடுதல் அடிப்படை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோல் இராமேஸ்வரத்தில் படகு இல்லம் அமைக்கப்பட்டு வருகிறது.மேலும் இராமேஸ்வரத்தில் தமிழக மக்கள் மட்டுமின்றி பிற மாநில மக்கள் தரிசனம் செய்வதற்கும் மற்றும் சுற்றுலா வருகைக்காக அதிகளவு மக்கள் வருகை தருவதை மேலும் இராமேஸ்வரத்தில் தமிழக மக்கள் மட்டுமின்றி பிற மாநில மக்கள் தரிசனம் செய்வதற்கும் மற்றும் சுற்றுலா வருகைக்காக அதிகளவு மக்கள் வருகை தருவதை முன்னிட்டு இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் இராமேஸ்வரத்திற்கு புறவழிச்சாலை அமைத்து தர கேட்டுக் கொண்டார். இக்கோரிக்கையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவரின் பார்வைக்கு கொண்டு சென்று இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் (முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களின் நினைவிடம்) பகுதியிலிருந்து அக்னிதீர்த்தம் கடற்கரை வரை சுமார் 6.கி.மீ தூரம் புறவழிச்சாலை அமைக்க ரூ.80 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கி இடங்கள் எடுப்பதற்கும் ரூ.70 கோடி வழங்கி சாலை அமைத்திடவும் என மொத்தம் ரூ.150 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக நிலம் எடுக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இப்பணி முடிவுற்றதும் விரைவில் சாலை அமைப்பதற்கான பணிகள் நடைபெறும் என தெரிவித்தார்.

# கப்பலூர் சிட்கோவில் மேற்கூரை சூரிய சக்தி திட்டம் குறித்த விழிப்புணர்வு கூட்டம்: கலெக்டர் பிரவீன் குமார் பங்கேற்பு




**திருமங்கலம், ஜூலை 31-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே அருகேயுள்ள கப்பலூர் சிட்கோவில் தொழில் துறையினருக்கான மேற்கூரை சூரிய சக்தி திட்டம் குறித்த விழிப்புணர்வு பயிலரங்கத்தில் மதுரை கலெக்டர் பிரவீன் குமார் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

தொழில்துறையில் மேற்கூரை சூரிய சக்தி திட்டம் என்பது தொழிற்சாலைகளின் கூரைகளில் சூரிய மின்கலன்களைப் பொருத்தி, அதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து, மின்சார கட்டணத்தைக் குறைக்கும் சிறப்பான திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களது மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் செயல்பட வழிவகை செய்யப்படுகிறது. இந்த திட்டத்திற்கு மத்திய மாநில அரசுகள் மானியத்துடன் நிதியுதவி வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக கப்பலூர் சிட்கோ கூட்ட அரங்கில் கப்பலூர் தொழிலதிபர்கள் சங்கம் மற்றும் இந்திய மாநில தொழில் வளர்ச்சி மற்றும் முதலீட்டு கழகங்களின் கவுன்சில் சார்பில் மேற்கூரை சூரிய சக்தி திட்டம் குறித்த விழிப்புணர்வு பயிலரங்கு கூட்டம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்விற்கு கப்பலூர் தொழிலதிபர்கள் சங்க தலைவர் பி. என்.ரகுநாதராஜா தலைமை வகித்தார். ஏராளமான தொழில் முனைவோர் மற்றும் தொழிலதிபர்கள் கலந்து கொண்ட இந்த விழிப்புணர்வு நிகழ்வினை இந்திய மாநில தொழில் வளர்ச்சி மற்றும் முதலீட்டு கழகங்களின் கவுன்சில் தலைமை இயக்குநர் ஹன்ஸ்ராஜ் வர்மா பங்கேற்று மேற்கூரை சூரிய சக்தி திட்டத்தின் சிறப்புகள் குறித்து துவக்க உரையாற்றினார்.இதையடுத்து நிகழ்வினில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மதுரை கலெக்டர் பிரவீன்குமார், மேற்கூரை சூரிய சக்தி அமைப்பதால் தொழில் துறையினருக்கு கிடைத்திடும் பயன்கள் குறித்தும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றியும் சிறப்புரை யாற்றியதுடன் ,மேற்கூரை சூரிய சக்தி நிறுவுதலில் தமிழக அளவில் 10வது இடத்திலிருந்த மதுரை மாவட்டம் தற்போது 9வது இடத்திற்கு முன்னேறி இருப்பதாக பெ ருமிதத்துடன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கப்பலூர் தொழிலதிபர்கள் சங்கத்தின் நிர்வாகிகள், சோலார் பேனல் அமைப்பு நிறுவனங்களின் அதிகாரிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மதுரை ரயில்வே கோட்ட புதிய மேலாளர் பதவியேற்பு

**மதுரை, ஜூலை 31-**

மதுரை ரயில்வே கோட்ட மேலாளராக இதுவரை இருந்த சரத் ஸ்ரீவத்சவாவின் பதவிக் காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து புதிய மேலாளராக ஓம்பிரகாஷ் மீனா தற்போது பதவி பொறுப்பினை ஏற்றார்.

1996-ம் ஆண்டு இந்திய ரயில்வே பொறியாளர் சேவை பிரிவில் பணியில் சேர்ந்த இவர் இரண்டு ஆண்டு பயிற்சிக்கு பிறகு பணியில் சேர்ந்தார். ராஜஸ்தான், ஜோத்பூர் எம்பிஎம் பொறியியல் கல்லூரியில் இளங்கலை பட்டம் பெற்ற இவர், ஆக்ரா, ஜெய்ப்பூர் மற்றும் பிகானேர் கோட்டங்களில் கோட்ட பொறியாளராகவும், கூடுதலாக ஆக்ராவில் முதுநிலை (பொறுப்பு) கோட்ட பொறியாளராகவும் பணியாற்றியுள்ளார்.

வடமேற்கு ரயில்வேயில் நிலைய மேம்பாட்டு முதன்மைப் பொறியாளராகவும் பணியாற்றியுள்ளார். முன்னதாக கிழக்கு ரெயில்வே கட்டுமான பிரிவில் சாலை பாதுகாப்பு திட்ட தலைமை பொறியாளராக பணியாற்றி வந்த இவர் தற்போது பணிமாற்றம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் முதல் தென்னக ரயில்வேயின் மதுரை மண்டல புதிய மேலாளராக ஓம்பிரகாஷ் மீனா பதவியேற்றார்.



● மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் செட்டிகுளம் ஊராட்சியில் காவனூர், வீரபாண்டி, உசிலம்பட்டி மற்றும் கொடிமங்கலம் ஆகிய ஊராட்சிகளுக்கு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று தொடங்கி வைத்து துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் உள்ளார்.



● சென்னை கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர்கள்/மண்டல மேலாளர்கள், தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள், சேமிப்புக்கிடங்கு நிறுவன அலுவலர்கள், கூட்டுறவுத்துறை பொது விநியோக பதிவாளர்கள், குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்ற புலனாய்வுத்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.



● சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று நேரில் சென்று ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். உடன் முதன்மைச்செயலாளர் கோ.பிரகாஷ், கட்டா ரவிதேஜா உடனிருந்தனர்.



● ராமேஸ்வரத்தில் அப்துல் கலாம் நினைவகம் பகுதியில் இருந்து 6 கிலோ மீட்டர் தொலைதூரத்திற்கு பல கோடி ரூபாய் மதிப்பில் அக்னி தீர்த்தம் கடற்கரை வரை புறவழிச்சாலை அமைய உள்ள பகுதியை அமைச்சர் எ.வ.வேலு நேற்று ஆய்வு செய்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.



● சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள மடப்புரத்தில் காவலர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்த அஜித்குமாரின் இல்லத்துக்கு நேரில் சென்ற அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, அஜித்குமாரின் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதோடு, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

# போலீசார் தாக்கியதில் உயிரிழந்த அஜித்குமார் குடும்பத்திற்கு இ.பி.எஸ். நேரில் ஆறுதல்

சிவகங்கை, ஜூலை 31

சிவகங்கையில் போலீசார் தாக்கியதில் உயிரிழந்த மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமாரின் புகைப்படத்திற்கு எடப்பாடி பழனிசாமி மாலை அணிவித்து நேற்று நேரில் அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. இதனை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "மக்களை சந்திப்போம் தமிழகத்தை காப்போம்" என்னும் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். வடமாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும் மக்களை சந்தித்த அவர், நேற்று முதல் தென்மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மக்களை சந்தித்து நேற்று முன்தினம் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவர், தமிழகத்தில் பல்வேறு ஊழல்கள் நடந்தேறி வருகின்றன. தி.மு.க. கொள்ளையடிக்கவே ஆட்சிக்கு வந்துள்ளது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் தி.மு.க.வின் அனைத்து ஊழல்கள் மீதும் விசாரணை நடத்தி சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அ.தி.மு.க. சட்டமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுத்ததால் தான் 1,000 ரூபாய் உரிமை தொகையை தி.மு.க. கொடுத்தது. தேர்தலின் போது ஆட்சிக்கு வந்தால் வரியை உயர்த்த மாட்டோம் என்று கூறிய தி.மு.க.வினர் தற்போது வரியை பல மடங்கு உயர்த்தியுள்ளனர். குப்பைக்கு கூட வரி உயர்த்தியுள்ளனர் என்று பேசினார்.

இந்நிலையில், சிவகங்கை மடப்புரம் காளி அம்மன் கோவிலில் காவலாளியாக இருந்த அஜித்குமார் குடும்பத்திற்கு எடப்பாடி பழனிசாமி நேரில் சென்று ஆறுதல் கூறினார். அஜித்குமாரின் புகைப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அஜித்தின் தாயார் மற்றும் அவருடைய சகோதரர் நவீன் குமார் ஆகியோருக்கு ஆறுதல் கூறினார்.

## நெல்லை இளைஞர் ஆணவக்கொலை வழக்கு:

# சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி அரசு உத்தரவு

தூத்துக்குடி, ஜூலை 31-

விசாரணை பாரபட்சமின்றி நடைபெறுவதை உறுதி செய்ய நெல்லை ஆணவக்கொலை வழக்கு சி.பி.சி.ஐ.டி.க்கு வழக்கு மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த பட்டியலின இளைஞரான கவின், கடந்த ஜூலை 27 அன்று நெல்லையில் கொலை செய்யப்பட்டார்.

இதையடுத்து, அவரைக் கொலை செய்ததாக சுர்ஜித் என்ற இளைஞர் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் சரணடைந்தார். சரணடைந்த சுர்ஜித், கவின் காதலித்து வந்த பெண்ணின் சகோதரர் என்பதும், கவின் மாற்று சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரைக் கொலை செய்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

சுர்ஜித் கைது செய்யப்பட்ட நிலையில், அவரது பெற்றோரான சரவணன் மற்றும் கிருஷ்ணகுமாரி ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

அவர்கள் இருவரும் சப்-இன்ஸ்பெக்டர்களாகப் பணியாற்றி வந்த நிலையில், இடைநீக்கம் செய்யப்பட்டனர். ஆனால், அவர்கள் இருவரையும் கைது செய்தால் மட்டுமே கவினின் உடலை வாங்கி அடக்கம் செய்வோம் என உயிரிழந்த இளைஞரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், நேற்று அரசு அறிவித்த நிவாரண நிதியை கவினின் பெற்றோர் வாங்க மறுத்துவிட்டனர்.

இதற்கிடையே, இந்த வழக்கின் விசாரணையை சி.பி.சி.ஐ.டி.-க்கு மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. விசாரணை பாரபட்சமின்றி நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் வழக்கு சி.பி.சி.ஐ.டி.-க்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், வழக்கு விசாரணை வெளிப்படையாக நடைபெறுவதற்கு குற்றம்சாட்டப்பட்டவரின் பெற்றோர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழக டிஜிபி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




● சென்னை பனையூரில் த.வெ.க. தலைமை அலுவலகத்தில் த.வெ.க. தலைவர் விஜய் கட்சிக்கு புதிய உறுப்பினர் சேர்க்கை பணியை விரைவுப்படுத்த 'மை டிவிகே' என பெயரிடப்பட்ட உறுப்பினர் சேர்க்கைக்கான செயலியை அறிமுகப்படுத்தி வைத்தார்.

## ஆடிப்பெருக்கு, வார விடுமுறை:

# தமிழகம் முழுவதும் 1,090 சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, ஜூலை 31-

ஆடிப்பெருக்கு, வார விடுமுறைகளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 1,090 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளதாக அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.

அரசு விரைவு போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குனர் ஆர்.மோகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- ஆடிபெருக்கு மற்றும் வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு ஆகஸ்டு 1-ம் தேதி (வெள்ளிக்கிழமை) 340 பஸ்களும், 2-ம் தேதி (சனிக்கிழமை) 350 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு ஆகஸ்டு 1-ம் தேதி (வெள்ளிக்கிழமை) 55 பஸ்களும் 2-ம் தேதி (சனிக்கிழமை) 55 பஸ்களும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 250 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதாவரத்தில் இருந்து ஆகஸ்டு 1-ம் தேதி 20 பஸ்களும் 2-ம் தேதி 20 பஸ்களும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் ஆகஸ்ட் 2 முதல் 4 நாட்கள் கனமழைக்கு வாய்ப்பு

## சென்னை வானிலை மையம் தகவல்

சென்னை, ஜூலை 31-

தமிழகத்தில் ஆகஸ்ட் 2 முதல் நான்கு நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, ஜூலை 30, 31ல் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

ஆக. 01ல் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

ஆக. 02ல் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஆக. 03ல் தஞ்சாவூர், திருவாரூர், நாகபட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஆக. 04ல் தஞ்சாவூர், திருவாரூர், நாகபட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், அரியலூர்\ மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஆக. 05ல் தஞ்சாவூர், திருவாரூர், நாகபட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், அரியலூர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'மை டிவிகே' என்ற பெயரில் உறுப்பினர் சேர்க்கை செயலி

## த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டார்

சென்னை, ஜூலை 31-

தமிழக வெற்றிக்கழக உறுப்பினர் சேர்க்கை செயலியை விஜய் வெளியிட்டார்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், அதனை சந்திக்க த.வெ.க. தீவிரமாக இறங்கி உள்ளது. த.வெ.க. சார்பாக 'மக்கள் விரும்பும் முதல்-அமைச்சர் வேட்பாளர்' என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கட்சியின் கட்டமைப்பு பணிகளை பலப்படுத்தும் பணியில் விஜய் ஈடுபட்டு வருகிறார். அந்த வகையில் கட்சிக்கு புதிய உறுப்பினர் சேர்க்கை பணியை விரைவுப்படுத்த மை டிவிகே என பெயரிடப்பட்ட உறுப்பினர் சேர்க்கைக்கான செயலியை சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. தலைமை அலுவலகத்தில் தவெக தலைவர் விஜய் அறிமுகப்படுத்தி வைத்தார். செயலியை தொடங்கி வைத்தப்பின் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 தலைமுறையினருக்கு உறுப்பினர் அடையாள அட்டையை விஜய் வழங்கினார்.

தமிழக வெற்றிக்கழகத்தின் தேர்தல் பரப்புரை முன்னெடுப்பையும் விஜய் நேற்று தொடங்கிறார். குடும்பம் குடும்பமாக பொதுமக்களை தவெகவின் உறுப்பினர்களாக இணைப்பதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஓரணியில் தமிழ்நாடு என திமுக உறுப்பினர் சேர்க்கை நடத்தும் நிலையில் தவெகவும் முன்னெடுத்துள்ளது.